# சிலாங்கூர் இன்று

இலவசம்

SMART SELANGOR

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2053 / சுபகிருது வருடம் ஆடி மாதம் / ஜூலை 7 / 2022 July 7 /2022


# நலத் திட்டங்களுக்கு வெ.60 கோடி செலவிட்டாலும்
# மாநிலத்தின் நிதி நிலை வலுவாகவே உள்ளது

உலு லங்காட்:-

மக்கள் நலத் திட்டங்களுக்கு 60 கோடி வெள்ளியைச் செலவிட்ட போதிலும் மாநிலத்தின் நிதிக் கையிருப்பு வலுவாக அதாவது 300 கோடி வெள்ளியாக உள்ளது. கோவிட்-19 மற்றும் மோசமான வெள்ளம் ஆகிய பிரச்னைகளை எதிர்கொண்ட போதிலும் இதற்கு முந்தைய மந்திரி புசார்கள் பதிவு செய்த அதே அடைவு நிலை தற்போதும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தெரிவித்தார்.

நாம் ஆண்டுக்கு அறுபது கோடி வெள்ளி வரை செலவிடுகிறோம். வருமானம் அதிகரிக்கும் போது மக்களுக்காக அதிகம் செலவிடுவோம். நாம் பெருந்தொற்றை எதிர்நோக்கிய போதிலும் மாநிலத்தின் வருமானம் அதிகரித்துள்ளதோடு நிர்ணயித்த இலக்கையும் தாண்டியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். நாம் அதிகமாக செலவிட்ட போதிலும் நமது கையிருப்பும் பாதுகாப்பான நிலையில் அதாவது 300 கோடி வெள்ளியாக உள்ளது என்று அவர் தெரிவித்தார். அம்பாங், தாமான் கோசாஸ் திடலில் நேற்று நடைபெற்ற உலு லங்காட் மாவட்ட நிலையிலான ஜெலாஜா சிலாங்கூர் பென்யாயாங் திட்டத்தை தொடக்கி வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார்.

வரவு செலவுத் திட்டத்தில் 20 கோடி வெள்ளியாக இருக்கும் நிதிப் பற்றாக்குறை மாநில அரசுக்கு சுமையை அளிக்காது என்று கடந்தாண்டு நவம்பர் மாதம் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது அமிருடின் கூறியிருந்தார்.




கோல லங்காட் மாவட்டத்தில் உள்ள 13 தமிழ்ப்பள்ளிகள் உட்பட பல மொழி ஆரம்பப் பள்ளிகள், கல்வி மேம்பாட்டுப் பணியை தொடர சிலாங்கூர் மாநில அரசின் மானியமாக வெள்ளி 17 லட்சத்து 11 ஆயிரம் 2022 ம் ஆண்டுக்கான உதவியாகப் பெற்றன.

மேலும் செய்திக்கு பக்கம் 8 பார்க்கவும்

# கோத்தா கெமுனிங் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மத்திய அரசின் உதவி கிடைக்கவில்லை.

ஷா ஆலம்:-

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கோத்தா கெமுனிங் மாநில சட்டமன்ற தொகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மத்திய அரசு அறிவித்த 2 வகையான உதவிகள் இதுவரை கிடைக்கவில்லை.

வீட்டுவசதி மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் (MOHE) நிர்வகிக்கப்படும் வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கும், உள்நாட்டு வருவாய் வாரியத்தால் (IRB) நிர்வகிக்கப்படும் வாகன பழுதுபார்ப்பு உதவிகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என மக்கள் பிரதிநிதி தெரிவித்தார்.

“இதுவரை, ஒரு மாநில சட்டமன்ற உறுப்பினராக, கட்டி முடிக்கப்பட்ட அல்லது செயல்பாட்டில் உள்ள வீட்டின் தகவல் அல்லது வீட்டைப் பழுதுபார்ப்பதற்கான காத்திருப்புப் பட்டியல் எதையும் நான் பெறவில்லை. “ஒரு வாகனத்திற்கான RM1,000 மதிப்புள்ள வாகன உதவி கூட பெறப்படவில்லை” என்று வீ கணபதிராவ் இன்று செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய தகவல்களை வழங்குவதன் மூலம் வீட்டுவசதி மற்றும் உள்ளூராட்சி அமைச்சகம் மற்றும் உள்நாட்டு வருவாய் வாரியத்துக்கு உதவ தனது தரப்பு தயாராக உள்ளது, ஆனால் இதுவரை எந்த பதிலும் வரவில்லை என்று அவர் கூறினார்.

“RM 1,000 தொகையான தொண்டு உதவி மற்றும் RM2,500 அடிப்படைத் தேவைகளுக்கான மத்திய அரசிடமிருந்து பெற இன்னும் ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்டவர்கள் உள்ளனர். “உதவி செயல்முறையை விரைவுபடுத்துவதற்காக உதவி பெறாத விண்ணப்ப தாரர்களிடமிருந்து தரவுகளை எடுத்து நாங்கள் சிலாங்கூர் கூட்டாட்சி மேம்பாட்டு அலுவலகம், பிரதம மந்திரி துறை (ICU-JPM) க்கு அனுப்புகிறோம்,” என்று அவர் கூறினார்.


பக்கம் 3 இலவச குடிநீர் திட்டத்திற்கு விண்ணப்பிக்குமாறு சிலாங்கூர் மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

பக்கம் 8 ஜூலை 2 அன்று கோலா சிலாங்கூர் ஸ்டேடியம் உத்தாமாவில் ஜெலாஜா சிலாங்கூர் என்னும் மக்களுக்கு புதிய உதவி திட்டம்

பக்கம் 13 புதிய அத்தியாயத்தின் தொடக்கப் புள்ளி தாமான் செந்தோசா தமிழ்ப்பள்ளி

## டிங்கி பரவலைத் தடுக்க சிலாங்கூர் அரசு

# வெ. 50 லட்சம் ஒதுக்கீடு

### - டாக்டர் சித்தி மரியா தகவல்



ஷா ஆலம்:
சிலாங்கூரில் அதிகரித்து வரும் டிங்கி காய்ச்சல் சம்பவங்களைக் கட்டுப்படுத்த மாநில அரசு 50 லட்சம் வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளது.

டிங்கி நோய் பரவும் சாத்தியம் உள்ள இடங்களை புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கண்காணிக்கக்கூடிய முன்னோடித் திட்டம் ஒன்றை மாநில அரசு மேற்கொண்டு வருவதாக பொது சுகாதாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் கூறினார்.

நோய்ப் பரவும் சாத்தியம் அதிகம் உள்ள இடங்களை அடையாளம் காண டிரோன் சாதனங்களைப் பயன்படுத்துவது மற்றும் அத்தகைய இடங்களை பொது மக்களும் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக செயலி ஒன்றை உருவாக்குவது ஆகியவையும் அந்த முன்னோடித் திட்டத்தில் அடங்கும் என்று அவர் தெரிவித்தார்.

இன்று அனுசரிக்கப்படும் 2022 ஆம் ஆண்டிற்கான ஆசியான் டிங்கி தினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

டிங்கி நோய்த் தடுப்புத் திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதற்காக மாநில அரசு இவ்வாண்டில் 50 லட்சம் வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளது என்றும் அவர் சொன்னார்.

டிங்கி நோய்த் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் அதிகரிக்கச் செய்வதற்காக சமூக நிலையிலான திட்டங்களை சுக்கா எனப்படும் சிலாங்கூர் சமூக சுகாதார தன்னார்வலர் அமைப்பு மேற்கொள்ளும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஏடிஸ் கொசுக்கள் பரப்பும் வைரஸ் மூலம் டிங்கி காய்ச்சல் பரவுகிறது. கொசு பரவலை தடுப்பதற்கான விழிப்புணர்வு மற்றும் செயல்பாடுகள் மூலம் இந்நோய்ப் பரவலை மனிதர்களால் கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.



## ஜூன் 11 ஆம் தேதி நிலவரப்படி எம்பிஎஸ்ஜே இல் 1,659 புதிய

### டிங்கி சம்பவங்கள் பதிவு




சுபாங் ஜெயா:-
ஜூன் 11ஆம் தேதியுடன் முடிவடைந்த 23வது எபிட் வாரத்தில் சுபாங் ஜெயா நகராண்மைக்கழக (எம்பிஎஸ்ஜே) நிர்வாகப் பகுதியில் மொத்தம் 1,659 பேர் டிங்கி காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுபாங் ஜெயா டத்தோ பண்டார் டத்தோ ஜோஹாரி அனுவார், டிங்கி காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, இப்பகுதியைச் சுற்றியுள்ள 11 ஹாட்ஸ்பாட்களில் இது பதிவு செய்யப்பட்டுள்ளது.

"இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண அனைத்துக் தரப்புகளும் பங்கு வகிக்க வேண்டும். எம்பிஎஸ்ஜே மற்றும் மாவட்ட சுகாதார அலுவலகம் தவிர, வீடுகள் அல்லது வளாகங்களைச் சுற்றியுள்ள பகுதிகள் ஏடிஸ் கொசுக்கள் இனப்பெருக்கம் செய்யாத இடமாக இருப்பதை குடியிருப்பாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.

இன்று எம்பிஎஸ்ஜே தலைமையகத்தில் அவர் கூறுகையில், "வாரத்திற்கு ஒருமுறை குறைந்தது 10 நிமிடங்களாவது ஏடிஸ் கொசு உற்பத்தியாகும் இடங்களைக் கண்டுபிடித்து அழிக்க வேண்டும்.

ஜூன் 15 அன்று, பொது சுகாதார ஆட்சிக்குழு உறுப்பினர் தனது கட்சி டிங்கி சம்பவம் அதிகம் ஏற்படும் இடங்களை திறமையாகக் கண்காணிப்பதற்கான புதிய தொழில்நுட்பத்தை செயல்படுத்துவதன் மூலம் ஒரு முன்னோடி திட்டத்தை செயல்படுத்துகிறது என்று தெரிவித்தார்.

டாக்டர் சித்தி மரியா மாமுட், இந்தத் திட்டமானது ட்ரோன்களைப் பயன்படுத்துவதையும், சுஆ50 லட்சம் ஒதுக்கீட்டின் மூலம் பொதுமக்களால் அணுகக்கூடிய தொற்றுநோய்க்கான ஹாட்ஸ்பாட் கண்டறிதல் செயலியை உருவாக்குவதையும் உள்ளடக்கியது என்றார்.

## இல்திஸாம் சிலாங்கூர் சிஹாட்காக வெ.5.5 கோடிக்கும் அதிகமாக

### ஒதுக்கப்பட்டுள்ளது

உலு லங்காட்:-
அம்பாங்கில் உள்ள பாடாங் தாமான் கோசாஸில் இன்று நடைபெற்ற சிலாங்கூர் பென்யாயாங் திட்டத்தில், மாநில அரசு இல்திஸாம் சிஹாட் (ஐ.எஸ்.எஸ்) என்னும் மாநில மருத்துவ நலன் திட்டத்தை அறிமுகப் படுத்தியது.

மாநில சுகாதார ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமூட் கூறுகையில், ஆரோக்கியமான காப்பீட்டுத் திட்டத்தின் (SIPS) மறுபெயரிடப்பட்ட திட்டமானது மொத்தம் வெ.5.55 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தகுதித் தேவைகள், பலன்களின் வகைகள் மற்றும் கார்டு செல்லுபடியாகும் காலம் உள்ளிட்ட பல மேம்பாடுகளுடன் மாநில அரசு ஐ.எஸ்.எஸ் இலக்கை 100,000 பெறுநர்களாக விரிவுபடுத்தியுள்ளது.

"தகுதியுள்ள ஐ.எஸ்.எஸ் உறுப்பினர்கள் வெ.6,000 வரையிலான பலன்களைக் கோரலாம், இது இறப்புப் பலன்களுக்காக வெ.5,000 மற்றும் இறுதிச் சடங்குச் செலவுகளுக்கு வெ.1,000 ஆகும்," என்று வெளியீட்டு விழாவில் அவர் தனது உரையில் கூறினார்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சுமார் 16,500 பெறுநர்கள் ஐ.எஸ்.எஸ்-க்கான ஒதுக்கீட்டை வழங்குகிறது. எனவே, அருகிலுள்ள சமூக சேவை மையங்களில் உடனடியாக விண்ணப்பிக்கலாம் என்றும் டாக்டர் சித்தி மரியா கூறினார்.




ஐ.எஸ்.எஸ் விண்ணப்பத்திற்கு தகுதி நிபந்தனை என்னவென்றால், தனிநபர் சிலாங்கூர் குடிமகனாக மாதத்திற்கு வெ.3,000 க்கும் குறைவாக சம்பாதிக்க வேண்டும், நாள்பட்ட நோய்கள் உள்ளவர்கள் மற்றும் பல குடும்ப நோய் வரலாறு பின்னணிகளை கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

"தகுதியுள்ள குடும்பங்கள் மற்றும் தனிநபர்கள் விபத்துகள், விபத்தினால் பகுதி உடல் செயலிழப்பு, தீவிர நோய் மற்றும் இறுதிச் சடங்குகள் போன்றவற்றுக்கு பலன்களைப் பெறலாம்.

"ஒவ்வொரு மாநில சட்டமன்றத்திலும் ஒதுக்கீடுகள் இன்னும் திறக்கப்பட்டுள்ளன, மேலும் இந்த முயற்சிக்கு விண்ணப்பிக்க, நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்ட நண்பர்கள் அல்லது உறவினர்களுக்கு விண்ணப்பிக்க அல்லது பரிந்துரைக்க மாநிலத்தில் உள்ளவர்களை நாங்கள் வரவேற்கிறோம்," என்று அவர் கூறினார்.

## புற்று நோய்ப் பின்னணி உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்

## மருத்துவ பரிசோதனையில் பங்கேற்க வலியுறுத்து

ஷா ஆலம்:
புற்றுநோய்ப் பின்னணி உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் உடனடியாகத் தங்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்று பொது சுகாதாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் கூறினார். சிலாங்கூர் சாரிங் இலவச மருத்துவ பரிசோதனைத் திட்டத்தில் அவர்கள் பதிவு செய்யலாம். நோய் மோசமடைவதைத் தவிர்க்க முன்கூட்டியே கண்டறிவதற்கான வாய்ப்பை இந்த மருத்துவ பரிசோதனை வழங்குகிறது என்று அவர் சொன்னார்.

உங்கள் குடும்பத்தில் பெருங்குடல், கர்ப்பப்பை வாய் அல்லது மார்பகப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் யாரேனும் உண்டா? அவ்வாறு இருப்பின், மொபைல் ஆப் மூலம் சிலாங்கூர் சாரிங் திட்டத்தில் பதிவு செய்யவும். பதிவு இலவசம். உங்கள் உயிருக்கு மதிப்பு கொடுங்கள். முன்கூட்டியே மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ளுங்கள் என்று அவர் நேற்று முகநூல் பதிவில் கூறினார். மாநில அரசாங்கம், சிலாங்கூர் சாரிங் திட்டத்திற்காக 34 லட்சம் வெள்ளியை ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 39,000 பேர் பயனடைவர் என மதிப்பிடப்படுகிறது.

நோய்ப் பின்னணி உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்,அதிக எடை கொண்டவர்கள் மற்றும் ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறையை வாழ்பவர்களுக்கு இச்சோதனையில் முன்னுரிமை அளிக்கப்படும்.

பொதுவான உடல் பரிசோதனை, ரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனை, கண் பரிசோதனை மற்றும் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் நோக்கிலான இச்சோதனை வரும் செப்டம்பர் 4 ஆம் தேதி வரை மாநிலம் முழுவதும் நடைபெறுகிறது. இந்த வாரம், சனிக்கிழமை டிங்கில் மற்றும் சுங்கை ராமால் ஆகிய இடங்களிலும் ஞாயிற்றுக்கிழமை சுங்கை பீலேக், பாண்டன் இண்டா மற்றும் தொராத்தாய் தொகுதிகளிலும் இந்த பரிசோதனை நடைபெறும்.



# நிதிச் சுமையைக் குறைப்பதில் இல்திஸாம் சிலாங்கூர் சிஹாட் திட்டம் பேருதவி

## பயனாளிகள் பெருமிதம்




ஷா ஆலம்:
இல்திஸாம் சிலாங்கூர் சிஹாட் திட்டம் மிகவும் பயனுள்ளதாகவும் அடிப்படைத் தேவைகளை ஈடுசெய்வதில் உதவக்கூடியதாகவும் உள்ளதாக அத்திட்ட பயனாளிகளின் வாரிசுகள் கூறுகின்றனர்.

இருதய நோய் காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் தன் கணவரை தாம் இழந்து மிகுந்து துயரில் ஆழ்ந்துள்ளதாக எம்.பெரியநாயகி (வயது 59) கூறினார்.

எங்களுக்கு குழந்தை இல்லாததால் என் சகோதரர் வீட்டில் தங்கியுள்ளேன். கணவரின் பிரிவு துயரத்தை ஏற்படுத்தினாலும் மாநில அரசின் இந்த உதவி எனது நிதிச்சுமையை ஓரளவு குறைக்க உதவியுள்ளது என்று அவர் சொன்னார்.

இந்த பணத்தை சேமித்து வைத்து மருந்து, உணவு மற்றும் அன்றாடத் தேவைக்கு பயன்படுத்தவிருக்கிறேன். என்று அவர் சிலாங்கூர் கினியிடம் தெரிவித்தார்.

வயது மூப்பின் காரணமாக தன் தந்தை கடந்த ஜனவரி மாதம் உயிரிழந்ததாக இத்திட்ட வாரிசான அஸ்மின் ஷாம் மொக்தார் (வயது 52) கூறினார்.

இறப்பு நேரும் பட்சத்தில் நல்லடக்க சடங்குகளை மேற்கொள்வதற்கு உண்டாகும் செலவை ஈடு செய்ய மாநில அரசின் இந்த திட்டம் பெரிதும் துணை புரியும் என்று அவர் சொன்னார். ஐ.எஸ்.எஸ். எனப்படும் இந்த திட்டத்தை மாநில அரசு கடந்த ஞாயிற்றுக்கிழமை அம்பாங், தாமான் கோசாசில் அதிகாரப்பூர்வமாகத் தொடக்கியது.


எம்.பெரியநாயகி


அஸ்மின் ஷாம் மொக்தார்

சுமார் 5 கோடியே 55 லட்சம் வெள்ளி நிதி ஒதுக்கீட்டிலான இத்திட்டம் பெடுலி சிஹாட் திட்டத்தின் புதுப்பிக்கப்பட்ட வடிவமாக விளங்குகிறது.

இந்த ஐ.எ.ஸ்.எஸ். திட்டத்தின் கீழ் மரண சகாய நிதியாக 5,000 வெள்ளி மற்றும் நல்லடக்கச் சடங்கிற்கான தொகையாக 1,000 வெள்ளி வழங்கப்படுகிறது.

# இலவச குடிநீர் திட்டத்திற்கு விண்ணப்பிக்குமாறு சிலாங்கூர் மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்




ஷா ஆலாம்:-
சிலாங்கூர் மக்கள் இலவச குடிநீர் திட்டத்திற்கு (சேட்) என்னும் சிலாங்கூர் டாருல் ஏசான் நீர் திட்டத்திற்கு விண்ணபித்து இலவச தண்ணீரை அனுபவிக்குமாறு பெங்குருசான் ஆயர் சிலாங்கூர் எஸ்டினென் பிஎச்டி பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறது. ஆயர் சிலாங்கூர் படி, "சேட்" கான பதிவு 31 டிசம்பர் 2024 வரை திறந்திருக்கும் மற்றும் தகுதியுடையவர்கள் 20 கன மீட்டர் இலவச தண்ணீரை அனுபவிப்பார்கள். தகுதித் தேவைகளில் விண்ணப்பதாரர் மலேசிய குடிமகனாக இருக்க வேண்டும் மற்றும் சிலாங்கூரில் குடும்ப வருமானம் வெ.4,000 மற்றும் அதற்கும் குறைவாக இருக்க வேண்டும். மேலும், குடியிருப்பு வளாகம் ஒரு தனிப்பட்ட மீட்டர் வகையாக இருக்க வேண்டும் மற்றும் விண்ணப்பதாரர் ஒரு கணக்கிற்கு மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவர். மேலும் தகவலுக்கு, https://www.airselangor.com/residen…/skim-air-darul-ehsan/ ஐப் பார்வையிடவும்.




# முதலீடுகளைக் கவர மந்திரி புசார் தென் கொரியா பயணம்

ஷா ஆலம்:-
ஈராண்டு கால இடைவெளிக்குப் பிறகு மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தென் கொரியாவை இலக்காகக் கொண்டு தனது முதலீட்டுப் பயணத்தை தொடக்கியுள்ளார்.

மந்திரி புசாரின் இந்த முதலீட்டுப் பயணத்தில் முதலீட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாங் கிம்மும் இடம் பெற்றுள்ளார்.

இந்த பயணத்தின் போது அவ்விரு தலைவர்களும் சிலாங்கூரில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டியுள்ள சில நிறுவனங்களுடன் பேச்சு நடத்தியதோடு சிலாங்கூர் மாநிலத்தின் வெற்றிக்கான இரகசியத்தையும் அவர்களுடன் பகிர்ந்து கொண்டனர்.

வான் போக்குவரத்து நிறுவனங்கள், மின் விளையாட்டு மென்பொருள் தயாரிப்புத் துறையினர் நீர், சோலார் சக்தி உள்ளிட்ட ராட்சத தொழில்நுட்ப நிறுவனங்களுடன் நாங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டோம் என்று அமிருடின் தனது பேஸ்புக் பதிவில் கூறினார்.

சியோலில் உள்ள மலேசிய தூதரகத்திற்கு மீடா அலுவலகத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இந்த பயணத்தின் மூலம் முதலீடுகளை ஈர்க்கும் அதே வேளையில் சிலாங்கூர்-தென் கொரிய உறவும் வலுப்பெறும் என நம்புகிறோம் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த பயணத்தின் போது மந்திரி பெசார் கே-வாட்டர் நிறுவனத்தால் நடத்தப்படும் சியோங்நாம் நீர் சுத்திகரிப்பு மையத்திற்கும் அவர் வருகை புரிந்தார். நீடித்த மற்றும் சுயமாக மின்சக்தியை உற்பத்தி செய்யக்கூடிய நவீன தொழில்நுட்ப ஆற்றல் கொண்ட அந்த சுத்திகரிப்பு மையம் சியோங்நாம் நகருக்கு சுத்தமான நீரை விநியோகம் செய்கிறது.

# ஐ-பிஸ்னஸ் கடனுதவித் திட்டத்திற்கு விண்ணப்பிப்பீர்- தொழில் முனைவோருக்கு ஹிஜ்ரா அழைப்பு



ஷா ஆலம்:
தங்கள் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்வதற்கு தேவையான மூலதனத் தைத் திரட்டுவதற்கு ஐ-பிஸ்னஸ் கடனுதவித் திட்டம் மூலம் வழங்கப்படும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு சிலாங்கூரில் உள்ள தொழில்முனைவோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். யாயாசான் ஹிஜ்ரா சிலாங்கூர் (ஹிஜ்ரா சிலாங்கூர்) அறவாரியம் ஐ-பிஸ்னஸ் திட்டத்தின் வாயிலாக வெ.50,000 வரை கடனுதவி வழங்குகிறது. மேலும், பல தொழில்முனைவோர் இத்திட்டத்தின் மூலம் பலனடைந்துள்ளனர்.

ஐ-பிஸ்னஸ் திட்டம் அனைத்து வணிகத் துறைகளுக்கும் கடனுதவி வாய்ப்பை வழங்குகிறது. மேல் விபரங்களுக்கு www.hijrahselangor.com என்ற அகப்பக்கத்தை வலம் வாருங்கள் என்று தனது முகநூல் பதிவில் அந்த அறவாரியம் தெரிவித்துள்ளது. இந்த கடனுதவிக்கான விண்ணப்பங்களை http://mikrokredit.selangor.gov.my/e-hijrah/login இணைப்பின் வாயிலாக செய்யலாம் .

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் வரை ஹிஜ்ரா அறவாரியம் 965,000 வெள்ளியை ஐ-பிஸ்னஸ் திட்டத்தின் வாயிலாக கடனுதவி வழங்கியுள்ளது என்று ஹிஜ்ரா சிலாங்கூர் மேம்பாட்டு அதிகாரி முகமது ரிட்வான் அஸ்மாரா முன்னதாக கூறியிருந்தார்.

இந்த கடனுதவித் திட்டம் மூலம் மாநிலத்தில் உள்ள மொத்தம் 2,229 தொழில்முனைவோர் பயனடைந்துள்ளனர். அவர்கள் தங்கள் வணிகத்தை விரிவுபடுத்துவதற்காக வெ.1,000 முதல் வெ.50,000 வரையில் கடன் பெற்றுள்ளனர்.

# சிலாங்கூரில் சுற்றுலாத் துறையை பிரபலப்படுத்த வெ.60 லட்சம் ஒதுக்கீடு



கோலாலம்பூர்:-

வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகளை அதிகளவில் ஈர்ப்பதற்காக வேளாண் சுற்றுலா மற்றும் சூழியல் சுற்றுலாத் துறைகளில் மாநில அரசு கவனம் செலுத்தும்.

பெரும்பாலான சுற்றுப் பயணிகள் இத்தகைய சுற்றுலா இடங்களை இன்னும் அறியாமலிருப்பதாக சுற்றுலாத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ஹீ லோய் சியான் கூறினார்.

சூழியல் சுற்றுப்பயணிகளைக் கவர காடுகள், நீர்வீழ்ச்சி, மின் மினிப் பூச்சிகள் சரணாலயம், ஸ்கை மிரர் போன்ற இடங்களும் வேளாண் சுற்றுப்பயணிகளை கவர்வதற்கு சிகிஞ்சான் மற்றும் சிப்பாங்கில் பல கவர்ச்சிகரமான இடங்களும் உள்ளதாக அவர் குறிப்பிட்டார். உள்நாட்டில் மற்றுமின்றி வெளிநாடுகளிலும் உள்ள சுற்றுப் பயணிகள் மத்தியில் சிலாங்கூரை பிரபலப்படுத்துவதற்கு மாநில அரசு 60 லட்சம் வெள்ளியை ஒதுக்கியுள்ளது என்றார் அவர்.

நேற்று இங்குள்ள விஸ்மா சைனிஸ் அசெம்பளியில் கைப்பேசி மூலம் புகைப்படம் எடுக்கும் போட்டியைத் தொடக்கி வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

சுற்றுலா மையங்கள் நல்ல நிலையில் இருப்பதை உறுதி செய்வதற்காக அவ்விடங்களை தரம் உணர்த்துவதற்கு 15 லட்சம் வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சுற்றுலா மையங்களை சீரமைப்பதில் ஊராட்சி மன்றங்கள், சுற்றுலா, கலை,கலாசார அமைச்சு மற்றும் டூரிசம் சிலாங்கூர் போன்ற தரப்பினரின் ஒத்துழைப்பை தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் அவர் சொன்னார்.

# சிலாங்கூர் ஆகாய ஊர்தி கண்காட்சியின் வழி 2022 வெ.70 கோடி பரிவர்த்தனையை இலக்காகக் கொண்டுள்ளது



ஷா ஆலம்:-

2022 ஆம் ஆண்டு சிலாங்கூர் ஆகாய ஊர்தி கண்காட்சி (SAS 2022) செப்டம்பர் 8 ஆம் தேதி தொடங்கி மூன்று நாட்களுக்கு RM70 கோடி பரிவர்த்தனை மதிப்பு இலக்குடன் நடைபெற உள்ளது. வர்த்தக ஆட்சிக்குழு உறுப்பினர் இரண்டாவது பதிப்பில் உள் மற்றும் வெளிநாட்டிலிருந்து இருந்து 70 க்கும் மேற்பட்ட நிறுவன கண்காட்சி அரங்கங்கள் பங்கேற்பு, 8,000 பார்வையாளர்களை ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என சினார் ஹரியான் தெரிவித்துள்ளது.

டத்தோ தெங் சாங் கிம் கருத்துப்படி, ஸ்கைபார்க் பிராந்திய விமானப் போக்குவரத்து மையத்தில் (RAC) நடைபெறும் கண்காட்சியில், சுபாங் சொகுசு தனியார் ஜெட் விமானங்கள் உட்பட 30 விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்களை காட்சிப்படுத்துவார். “SAS 2022 தொழில்துறை வீரர்களுக்கு வணிக தொழில்நுட்ப வாய்ப்புகளைத் திறக்கிறது, மேலும் ட்ரோன் தொழில்நுட்பம் உட்பட பொதுமக்களுக்கு விமான போக்குவரத்து பற்றிய வெளிப்பாடு மற்றும் அறிவை வழங்குகிறது. “அதே நேரத்தில், இந்த அமைப்பு விமானத் துறை ஆராய்ச்சி தொழில் துறைகளில் இளைஞர்களுக்கு யோசனைகளை வழங்குகிறது,” என்று பெட்டாலிங் ஜெயாவில் நடந்த விழாவில் அவர் கூறினார்.

கடந்த ஆண்டு கண்காட்சியில் பங்கேற்ற ஆறு நாடுகளில் இத்தாலி, நியூசிலாந்து மற்றும் துருக்கி ஆகியவை அடங்கும் என்றும் மேலும் பல நாடுகளுக்கு அழைப்புகள் மூலம் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக சாங் கிம் கூறினார்.

இக்கண்காட்சியில் பங்கேற்க விருப்பம் உள்ளவர்கள் www. selangoraviationshow.com என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம்,” என்றார்.

சபுரா ஏரோ, டெஸ்டினி ஏவியா டெக்னிக், எபிக் ஏரோ, டிஜேஜ அகாடமி, சூப்பர் அக்சஸ், பிசிஎஸ் ஏவியேஷன், பிபஸ் மெட்டல்ஸ், சிரிம் மற்றும் இன்டர்நேஷனல் ஏரோ டிரெய்னிங் அகாடமி ஆகிய நிறுவனங்கள் தங்கள் பங்கேற்பை உறுதிப்படுத்தின.

கடந்த ஆண்டு நவம்பர் 25 முதல் 27 வரை நடைபெற்ற SAS இன் முதல் பதிப்பு, ஏரோ அங்காசா என்ற துணைத் துறையுடன் கையொப்பமிடப்பட்ட 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் உடன் (MoU) RM10 கோடி வரை முதலீடுகளை ஈர்த்தது.

# மாநில வேலைவாய்ப்பு திட்டம் 600க்கும் மேற்பட்ட தனிநபர்களுக்கு வேலை கிடைக்க உதவியது

ஷா ஆலம்:-

சிலாங்கூர் ஊழியர் ஆற்றல் மேம்பாட்டு பிரிவு (யுபிபிஎஸ்) படி, மொத்தம் 641 நபர்கள் இதுவரை ஏழு தொடர் வேலை வாய்ப்பு திட்டம் மூலம் பணிபுரிய ஏற்றுக்கொள்ளப்பட்டனர். அதன் தலைமை ஒருங்கிணைப்பாளர் எஸ் விஜயன் கூறுகையில், இன்னும் இரண்டு திட்டத் தொடர்கள் எஞ்சி இருந்த போதிலும், இந்த எண்ணிக்கை அதன் ஆரம்ப கட்ட இலக்கு 500 பேரை தாண்டியது.



எஸ் விஜயன்

அவர்களில் பெரும்பாலோர் ஏற்கனவே உற்பத்தி, துறைமுகம், தளவாடங்கள் மற்றும் பொருட்களை விநியோகம் போன்ற நிறுவனங்களில் சேவைகளை ஆரம்பித்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

“பொதுமக்களுக்கு, குறிப்பாக கோவிட்-19 காரணமாக வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கு பொருத்தமான வேலைகள் பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்கான எட்டு இடங்களை ஆராய்ந்துள்ளோம். “பெறப்பட்ட தரவுகளில் கடந்த வாரம் தஞ்சோங் காராங்கில் நடந்த திட்டம் சேர்க்கப்படவில்லை,” என்று அவர் சிலாங்கூர்கினியை தொடர்பு கொண்டபோது கூறினார்.

இதற்கிடையில், அடுத்த திட்டம் ஜூன் 18 ஆம் தேதி கோலா லங்காட்டில் உள்ள டேவான் பந்திங் பாருவில் நடைபெறும் என்றும் அதைத் தொடர்ந்து டேவான் ஸ்ரீ பெர்ணாம், சபாக் பெர்ணாம் (ஜூன் 25) என்றும் அவர் கூறினார்.

“எனவே, திட்டம் நடைபெறும் இடத்தைச் சுற்றியுள்ள பொதுமக்கள் வேலை தேடுவதற்கான வாய்ப்புகள் மற்றும் இடத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு நான் ஊக்குவிக்கிறேன்,” என்று அவர் கூறினார்.

ஜோப்கேர் டூர் என்பது சிலாங்கூர் அரசாங்கத்தின் முன்முயற்சி ஆகும், இது கோவிட்-19 தொற்றுநோயால் தங்கள் வருமானத்தை இழந்த குறைந்த, நடுத்தர மற்றும் உயர் திறமையான மக்கள் வேலைகளைப் பெற உதவும்.




சமூகப் பாதுகாப்பு அமைப்புடன் (சொக்சோ) இணைந்து இந்த திட்டத்தில் 15 உள்ளூர் நிறுவனங்கள் இணைந்து பல்வேறு துறைகளில் கிட்டத்தட்ட 3,000 வேலை வாய்ப்புகளை வழங்குகின்றன. ஆர்வமுள்ள நபர்கள் https://uppselangor.wixsite.com/my-site இணைப்பு மூலம் பதிவு செய்யலாம்



# ரூமா இடாமான் திட்டத்தின் கீழ் 78,182 வீடுகள் நிர்மாணிக்கப்படும்

## ரோட்சியா இஸ்மாயில் தகவல்

ஷா ஆலம்:-

மாநில மக்களுக்காக அடுத்த சில ஆண்டுகளில் மந்திரி புசார் கழக கழக (எம்.பி.ஐ.) ரூமா இடாமான் திட்டத்தின் கீழ் 78,182 வீடுகள் நிர்மாணிக்கப்படும் என்று வீடமைப்பு நகர்ப்புற நல்வாழ்வுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கூறினார்.

கடந்த 2020 மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் வாயிலாக மூன்று மாவட்டங்களில் 4,819 வீடுகள் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருவதாக அவர் சொன்னார்.

கட்டுப்படி விலை வீட்டு நிர்மாணிப்பு ஊக்குவிப்புத் திட்ட முன்னெடுப்பின் வாயிலாக கட்டுமானத் துறையில் கோவிட்-19 பொருந்தொற்றுக்கு பிந்தைய பொருளாதார மீட்சியை உறுதி செய்ய இயலும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த 2020 மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட காரணத்தால் பல திட்டங்கள் இன்னும் முழுமை பெறாமலிருக்கின்றன. இத்திட்டங்கள் இவ்வாண்டிலும் தொடரும் என்பதோடு அடுத்த சில ஆண்டுகளில் 44,304 வீடுகள் நிர்மாணிக்கப்படும் என்றார் அவர்.

சிலாங்கூர் மாநில வீடமைப்பு சொத்துடைமை கழகத்திடமிருந்து தாங்கள் 5,298 விண்ணப்பங்களைப் பெற்றுள்ளதாக கூறிய அவர், தற்போது 4,819 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வரும் வேளையில் எஞ்சியவை தனியார் துறையினரால் மேற்கொள்ளப்படும் ரூமா ஹராப்பான் திட்ட வீடுகளைக் கொண்டு ஈடு செய்யப்படும் என்றார்.

மாநில சட்டமன்றத்தில் மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷாவின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதங்களை முடித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

# ஸ்மார்ட் வாடகைத் திட்டம் அதிகமானோருக்கு வீடுகளை சொந்தமாக்க உதவுகிறது

உலு லங்காட்:-

2015 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்மார்ட் வாடகைத் திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட 1,000 வீடுகளை பெற ஏற்பாடாகியுள்ளது.

அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் குறைந்த வருமானம் பெறும் பிரிவைச் சேர்ந்த அதிகமான வீடு தேடுபவர்களுக்கு உதவி வழங்கப்படும் என்பதால், இந்த எண்ணிக்கை 4,000 ஆக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

"2018 ஆம் ஆண்டில், நாங்கள் பிபிஆர் (மக்கள் வீட்டுத் திட்டங்கள்) அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட சுமார் 400 வீடுகளை மட்டுமே வாடகைக்கு விட்டோம், இப்போது கிட்டத்தட்ட 1,000 வீடுகள் வாங்கப்பட்டு சொந்தமாக உள்ளன.

"இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில், ஸ்மார்ட் வாடகை திட்டத்தைச் செயல்படுத்த மொத்தம் 4,000 வீடுகளைப் பெறுவோம் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்," என்று அவர் நேற்று அம்பாங்கில் உள்ள தாமான் கோசாஸில் சிலாங்கூர் பென்யாயாங் கண்காட்சியில் கூறினார்.

அமிருடின் கூறுகையில், இதுவரை குத்தகைதாரர்களிடம் இருந்து நல்ல வரவேற்பு கிடைத்தது, அவர்களில் 99 விழுக்காட்டினர் தொடர்ந்து பணத்தைத் திருப்பிச் செலுத்துகின்றனர்.

"இந்த திட்டத்தின் சிறப்பு அம்சம் என்னவென்றால், வாடகையில் 30 விழுக்காடு ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு திருப்பித் தரப்படும், மேலும் நாங்கள் திருப்பிச் செலுத்திய பணத்தைப் பயன்படுத்தி வீடு வாங்க விரும்புவோருக்கு இது உதவும்," என்று அவர் கூறினார்.

ரூமா சிலாங்கூர் கூ சொந்தமாக வீடு இல்லாத குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட பிரிவினருக்கு தங்கள் வீடுகளை சொந்தமாக்குவதற்கான வாய்ப்பை ஸ்மார்ட் வாடகைத் திட்டம் வழங்குகிறது.




# 2035 ஆம் ஆண்டுக்குள் சுபாங் ஜெயாவில் 170,000 வீடுகள் கட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது

சுபாங் ஜெயா:-

மக்கள் தொகை அடர்த்தி காரணமாக 2035 ஆம் ஆண்டுக்குள் சுபாங் ஜெயா நகர சபை (எம்பிஎஸ்ஜே) நிர்வாகப் பகுதியில் மொத்தம் 170,000 வீடுகள் கட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுபாங் ஜெயா உள்ளூர் திட்டம் 2035 (ஆர்டிஎஸ்ஜே2035) அடிப்படையிலான கணிப்புகள் சினெர்ஜி மற்றும் சமூகத்தின் ஒத்துழைப்பைக் கோருவதாக அதன் டத்தோ பண்டார் ஜோஹாரி அனுவார் கூறினார்.

"ஆர்டிஎஸ்ஜே2035 குறிப்பிட்ட இடங்களுக்கு ஏற்ப வீட்டுப் பிரிவுகளின் எண்ணிக்கையை 60 முதல் 120 வரை அதிகரிக்கிறது. எனவே 15.6 லட்சம் மக்கள்தொகையால் உருவாக்கப்படும் வீட்டு தேவையை பூர்த்தி செய்ய அந்த தொகையை நாங்கள் திட்டமிடுகிறோம்.




"நகராட்சி வளர்ச்சி, ரக்கான் சினெர்ஜி மற்றும் சமூகப் பங்கேற்புக்கான நில மேம்பாட்டிற்கான கோரிக்கையை நாங்கள் சமப்படுத்த வேண்டும், இந்த தளத்தை (ஆர்டிஎஸ்ஜே) வழங்குவதன் மூலம் நகராட்சி வளர்ச்சிக்கு அரசு உதவுகிறது," என்று அவர் நேற்று கூறினார்.

அக்டோபர் 2020 இல் அடையப்பட்ட நகர அந்தஸ்துக்கு ஏற்ப பொது வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகளை வழங்க டெவலப்பர்களுடன் தனது தரப்பு பணியாற்றி வருவதாக ஜோஹாரி கூறினார்.

பூச்சோங் உத்தாமாவில் உள்ள பல அடுக்கு பரிமாற்ற கட்டுமானத் திட்டத்திற்கு அவர் உதாரணம் அளித்தார், இதற்கு சுஆ3 கோடி செலவில் போக்குவரத்து தொடர்ச்சியை மேம்படுத்த ரக்கான் சினெர்ஜி பங்களித்தது.

"மொத்த மக்கள்தொகையின் அடிப்படையில் குறிப்பிட்ட வகைகளுக்கு ஏற்ப முழுமையான பொது வசதிகள் வழங்கப்பட வேண்டும். உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் உள்ள பங்களிப்பு, நகரத்தின் வளர்ச்சிக்கு துணைபுரிகிறது," என்றார்.

# 510 இந்திய தொழில்முனைவோர் ஐ-சீட் மூலம் வணிக கருவி உதவியைப் பெறுகின்றனர்

ஷா ஆலம்,: -

கடந்த ஆண்டு முதல் சிலாங்கூர் இந்திய அதிகாரமளித்தல் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு (ஐ-சீட்) திட்டத்தின் மூலம் மொத்தம் 510 இந்திய தொழில்முனைவோர் கருவி உதவியைப் பெற்றுள்ளனர்.

ஆண்டுக்கு வெ.10 லட்சம் ஒதுக்கப்படும் சமூக-பொருளாதார மேம்பாடு திட்டத்தின் வழி கடந்த ஆண்டு 260 தொழில்முனைவோரை உள்ளடக்கியதாகவும், இவ் ஆண்டு மேலும் 250 பேர்களையும் சேர்த்து 510 இந்திய தொழில் முனைவோர் உதவிப் பெற்றனர் என்று சமூக-பொருளாதார மேம்பாடு ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் கூறினார்.

“இந்த ஆண்டு மட்டும் எங்களுக்கு 700 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன, அதில் 500க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் உண்மையிலேயே தகுதியானவை, இதுவரை 250 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

மடிக்கணினிகள் தவிர உபகரண உதவிக்கான எல்லா விண்ணப்பத்தையும் தனது தரப்பு ஏற்றுக்கொண்டதாக அவர் கூறினார்.



“ஆன்லைனில் பொருட்களை விற்பதாகக் கூறி பலர் மடிக்கணினிகளை கேட்கிறார்கள், இந்த விண்ணப்பத்தை நாங்கள் நிராகரிப்போம். விற்பனை பொருட்கள் மற்றும் சேவைகள் மட்டுமே செயல்படுத்தப்படும்,” என்று அவர் கூறினார்.

இந்தியர்கள் நடத்தும் தொழிலுக்கு ஏற்ப உபகரண உதவிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கில் கடந்த ஆண்டு ஏப்ரல் 7ஆம் தேதி ஐ-சீட் திட்டம் தொடங்கப்பட்டது.

சிலாங்கூர் குடிமக்கள் அல்லது 10 ஆண்டுகளுக்கும் மேலாக சிலாங்கூரில் வசிப்பவர்கள், தனிநபர்கள் மற்றும் முழு குடும்பங்களும் மாதத்திற்கு வெ.3,000 க்குக் கீழே சம்பாத்தியம் பெறுபவர்கள் மற்றும் மாநிலத்தில் வணிகங்கள் செய்பவர்களே விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.

கூடுதலாக, வணிகம் சுறுசுறுப்பாகவும் சீரானதாகவும் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் அல்லது தம்பதியினர் (கணவன்/மனைவி) சிலாங்கூர் மாநில வறுமை ஒழிப்பு புளுபிரிண்ட் உதவித் திட்டம் அல்லது சிலாங்கூர் சிறு தொழில்முனைவோர் நிதித் திட்டத்தின் கீழ் உபகரண உதவியைப் பெறாதவர்களாக இருக்க வேண்டும்.



# வெ.1,000 பெற தகுதியுடைய வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானோர் உதவி கோரவில்லை

ஷா ஆலம்:-

சிலாங்கூர் பாங்கிட் (பிஎஸ்பி) உதவியைப் பெறாத கோத்தா கெமுனிங் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள், கிள்ளான் நிலம் மற்றும் மாவட்ட அலுவலகத்திற்கு (பிடிடி) சென்று உதவி கோருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மாநில சட்டமன்ற உறுப்பினர் வீ கணபதிராவ், இதுவரை நூற்றுக்கணக்கான பாதிக்கப்பட்டவர்கள், அவர்கள் பலன்களைப் பெறத் தகுதி பெற்றிருந்தாலும், வெ.1,000 உதவியை இன்னும் கோரவில்லை என்று கூறினார்.

மே 7 அன்று, கடந்த ஆண்டு டிசம்பரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 121,987 குடும்பங்கள் பிஎஸ்பி தொகையாக வெ.1,000 பெற்றதாக டத்தோ மந்திரி புசார் தெரிவித்தார். வெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் உள்பட பாதிக்கப்பட்டவர்களின் சுமையைக் குறைக்க, வெ.12.2 கோடிக்கும் அதிகமான தொகை செலவிடப்பட்டதாக டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

# ஜெலாஜா சிலாங்கூர் பென்யாயாங் திட்டம் விவசாயிகளுக்கு வெ.20 லட்சம் நிதியுதவி

உலு லங்காட்:-

ஜெலாஜா சிலாங்கூர் பென்யாயாங் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு சுமார் 20 லட்சம் வெள்ளி பகிர்ந்தளிக்கப்படுவதாக விவசாயத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் ஹஷிம் கூறினார்.

வேளாண் உற்பத்தி பொருள்கள் தரமாக இருப்பதற்கு ஏதுவாக விதைகள், உரம் உள்ளிட்ட பொருள்கள் இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது என்று அவர் சொன்னார்.

உலு லங்காட் மாவட்டத்திலுள்ள 24 விவசாயிகளுக்கு சுமார் நான்கு லட்சம் வெள்ளி மதிப்புள்ள உதவியை வழங்குவதன் மூலம் இத்திட்டத்தை தொடங்குகிறோம். இதன் பின்னர் இத்திட்டம் இதர மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

காய்கறி மற்றும் பழ பயிரீட்டில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இந்த உதவி வழங்கப்படும் என்று இந்த உதவித் தொகை வழங்கும் நிகழ்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் குறிப்பிட்டார்.

மாநில மக்களுக்கு பல்வேறு உதவித் திட்டங்களை அறிமுகம் செய்யும் ஜெலாஜா சிலாங்கூர் பென்யாயாங் திட்டம் நேற்று கோல லங்காட் மாவட்டத்தில் தொடக்க விழா கண்டது. மாநில அரசின் 23 துணை நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் அமல்படுத்துகிறது.

மாநில அரசு அமல்படுத்தும் திட்டங்கள் வாயிலாக மேலும் அதிகமானோர் பயன் பெறுவதை உறுதி செய்யும் நோக்கில் பெடுலி ராக்யாட் திட்டத்திற்கு மாற்றாக இல்திஸாம் சிலாங்கூர் பென்யாயாங் திட்டத்தை 60 கோடி வெள்ளி நிதி ஒதுக்கீட்டில் மாநில அரசு அமல்படுத்துகிறது.



# மின்-வணிக விருதளிப்பு நிகழ்வு

## ஏழாம் ஆண்டாகத் தொடர்கிறது -250 பேர் பங்கேற்பு

கோலாலம்பூர், ஜூன் 21- மலேசிய முதன்மை மின்-வணிக வர்த்தகர் விருதளிப்பு நிகழ்வு இவ்வாண்டும் தொடர்ந்து நடத்தப்படும். வெற்றி பெற்ற தொழில்முனைவோரை கௌரவிக்கும் நோக்கிலான இந்த நிகழ்வு நாளை தொடங்கி மூன்று மாதங்களுக்கு நடைபெறும்.

ஏழாம் ஆண்டாக நடத்தப்படும் இந்த விருதளிப்பு நிகழ்வு 250 பங்கேற்பாளர்கள் மற்றும் 5 கோடி வெள்ளி வர்த்தக மதிப்பைக் கொண்டதாக இருக்கும் என்று சிடேக் எனப்படும் சிலாங்கூர் மாநில தகவல் தொழில்நுட்பம் மற்றும் இலக்கவியல் பொருளாதாரக் கழகம் கூறியது.

அறுபதாயிரம் வெள்ளி வரையிலான வெகுமதியை இந்த விருதளிப்பு உள்ளடக்கியிருக்கும் என்பதோடு அனைத்துலக சந்தைகளில் நுழைவதற்கு ஐந்து பங்கேற்பாளர்களும் இந்நிகழ்வில்




தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று அக்கழகத்தின் தலைமை செயல்முறை அதிகாரி யோங் காய் பிங் கூறினார்.

இந்த நிகழ்வின் பங்கேற்பாளர்கள் இவ்வாண்டு மார்ச் மாதத்திற்கு முன்னதாக மின்-வர்த்தக அகப்பக்கத்தை கொண்டிருக்க வேண்டும் என்பதோடு குறைந்தது 25,000 வெள்ளி மதிப்பிலான வியாபாரம் அல்லது இவ்வாண்டில் இதுவரை குறைந்தது 100 அழைப்பாணைகளைப் பெற்றிருக்க வேண்டும் என்று அவர் சொன்னார்.

இதுதவிர, மலேசிய நிறுவன ஆணையத்திலும் அவர்கள் தங்கள் வணிகத்தை பதிவு செய்திருக்க வேண்டும். இந்த நிகழ்வுக்கு அஃபின் வங்கி ஏற்பாட்டு ஆதரவை வழங்கியுள்ளதோடு இலக்கவியல் வர்த்தக தளமான சப் ப்ளேஸ் அதிகாரப்பூர்வ மின்-வணிகத் தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றார் அவர். கடந்த 2016 ஆம் ஆண்டில் முதன் முறையாக இந்த டோப் இ.சி.எம். விருதளிப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்ட போது 60 பங்கேற்பாளர்கள் மட்டுமே பங்கேற்றனர். ஆண்டு தோறும் இந்த எண்ணிக்கை அதிகரித்து கடந்தாண்டு அந்த எண்ணிக்கை 181 ஆக உயர்வு கண்டது என்றார் அவர்.

# பத்தாங் காலி தொகுதியில் வெ.60,000 செலவில்

## சிறு அடிப்படை வசதிகள் சீரமைப்பு

ஷா ஆலம்:- பத்தாங் காலி சட்டமன்றத் தொகுதியிலுள்ள பகுதிகளில் சிறிய உள்கட்டமைப்புத் திட்டங்களை மேற்கொள்ள இதுவரை மொத்தம் 60,000 வெள்ளி செலவிடப்பட்டுள்ளது.

வெள்ளம் மற்றும் புயலால் சேதமடைந்த



குடியிருப்பாளர்களின் வீடுகளின் கூரைகள் பழுதுபார்க்கும் பணிகளும் அதில் அடங்கும் என்று தொகுதி ஒருங்கிணைப்பாளர் சைபுடீன் ஷாபி முகமது கூறினார்.

உலு சிலாங்கூர் குடியிருப்பாளர்களின் வீடுகள் இத்தகைய பேரிடர்களால் அடிக்கடி பாதிக்கப்படுகின்றன. எனவே, நாங்கள் ரொக்கமாக தொகையை வழங்குவது அல்லது ஒப்பந்ததாரரை நியமித்து பாதிப்புகளைச் சரி செய்வது போன்ற பணிகளை மேற்கொள்கிறோம் என்று அவர் தெரிவித்தார் .

குடியிருப்புவாசிகளின் வசதிக்காக, குடியிருப்புகளில் குறைவான செலவை உட்படுத்திய சிறிய சேதம் ஏதும் ஏற்பட்டால் நாங்கள் உடனடியாகத் தீர்ப்போம் என்று அவர் தொடர்பு கொண்டபோது சொன்னார்.

இதற்கிடையில், தொகுதியில் சிறு திட்டங்களுக்கு சிலாங்கூர் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 100,000 லட்சம் வெள்ளி ஒதுக்கீட்டில் உள்ள எஞ்சியத் தொகை முழுமையாகப் பயன்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

விளையாட்டு மைதானங்கள், சமுதாயக் கூடங்கள், வடிகால்களை சீரமைத்தல் போன்ற திட்டங்களை சம்பந்தப்பட்ட பகுதிகளில் செயல்படுத்தலாம் என்பது குறித்து நேற்று பெங்குலு மற்றும் கிராமத் தலைவர்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

கூடுமானவரை, ஒதுக்கீட்டை உடனடியாக மக்களின் நலனுக்காகச் செலவிட விரும்புகிறோம். ஆகவேதான் திட்டங்கள் தொடர்பில் உரிய ஆவணங்களைத் தயாரிக்க சம்பந்தப்பட்ட தரப்பினரைக் கேட்டுக்கொள்கிறோம் என்று அவர் கூறினார்.

# எஸ்.பி.எம். தேர்வில் சிறப்பாகத் தேறிய மாணவர்களுக்கு

## ரொக்கப் பரிசு-கோல குபு பாரு சட்டமன்றம் வழங்குகிறது



ஷா ஆலம்:- கடந்தாண்டிற்கான எஸ்.பி.எம். தேர்வில் 5ஏ மற்றும் அதற்கு மேல் முடிவுகளைப் பெற்றவர்களுக்கு கோல குபு பாரு சட்டமன்றத் தொகுதி ரொக்கப் பரிசுகளை வழங்குகிறது.

தேர்வில் சிறப்பான அடைவு நிலையைப் பதிவு செய்த மாணவர்களைப் பாராட்டும் அதே வேளையில் எதிர்காலத்தில் அவர்கள் மேலும் ஊக்கமுடன் படிக்க ஊக்குவிக்கும் நோக்கில் இந்த வெகுமதி வழங்கப்படுவதாக தொகுதி உறுப்பினர் லீ கீ ஹியோங் கூறினார். கொண்டுள்ளது.

இந்த வெகுமதி வழங்கும் திட்டம் கடந்த 2014 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், ஒன்பதாவது ஆண்டாக தொகுதி மாணவர்களுக்கு ரொக்கப் பரிசுகளை வழங்கும் நிகழ்வை நடத்துகிறது என்று அவர் சிலாங்கூர் கினியிடம் கூறினார்.

அத்தேர்வில் 5A பெற்ற மாணவர்கள் 100 வெள்ளியைப் பெறுவார்கள். அதைத் தொடர்ந்து வெ.150 (6A), வெ.200 (7A), வெ.250 (8A), வெ.300 (9A), 10A மற்றும் அதற்கும் மேல் பெற்ற மாணவர்களுக்கு வெ.350 வழங்கப்படும் என்றார். மாணவர்களின் பெற்றோர்கள் கோல குபு பாரு தொகுதி வாக்காளர்களாக இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும். தகுதியுள்ள மாணவர்கள் https://forms.gle/GKMMwj8DgUAXWK5S7 என்ற இணைப்பின் மூலம் ஜூன் 30 ஆம் தேதிக்குள் தேர்வுச் சீட்டு மற்றும் பிறப்புச் சான்றிதழைப் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். தகுதி பெற்ற மாணவர்கள் ஜூலை மாதம் நடைபெறும் சிறப்பு நிகழ்வில் கௌரவிக்கப்படுவார்கள். மேல் விபரங்களுக்கு தொகுதி சேவை மையத்தை 03-6064 5505 அல்லது 011-19728303 (Ain) என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

# கோல லங்காட் மாவட்ட பள்ளிகளின் மேம்பாட்டுப் பணிக்கு சிலாங்கூர் மாநில அரசின் மானியமாக

# வெ.17 லட்சத்து 11 ஆயிரம் உதவி

முதல் பக்கத் தொடர்ச்சி...

ஷா ஆலம்:-

கோல லங்காட் மாவட்டத்திலுள்ள பல மொழி ஆரம்பப் பள்ளிகளின் கல்வி மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ள சிலாங்கூர் மாநில அரசின் மானியமாக வெள்ளி 17 லட்சத்து 11 ஆயிரத்தை 2022 ம் ஆண்டுக்கான உதவியாகப் பெற்றன.

சிலாங்கூர் மாநில மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி அவர்களிடமிருந்து அதற்கான நிதி பெறும் சடங்கில் அம் மாவட்டத்தில் உள்ள 13 தமிழ்ப்பள்ளிகள் பிரதிநிதிக்கும் வண்ணம் தெலுக் பங்கிலீமா காராங் ஆரம்பத் தமிழ்ப்பள்ளி வெள்ளி 75,000த்தையும், கோரித்தீவு மேற்கு பகுதி ஆரம்பத் தமிழ்ப்பள்ளி வெள்ளி 65 ஆயிரத்தையும், பந்திங் சிம்பாங் மோரிப் ஆரம்பத் தமிழ்ப்பள்ளி 60 ஆயிரத்தையும், கோரித்தீவு கிழக்கு தோட்ட ஆரம்பத் தமிழ்ப்பள்ளி 55 ஆயிரத்துக்கான காசோலைகளை பெற்றுக் கொண்டன.

பள்ளிகளுக்கு நிதி வழங்கும் நிகழ்வில் மாநில மந்திரி புசாருடன், மாநில இஸ்லாமியச் சமய விவகாரங்கள், பயனீட்டாளர் மற்றும் ஹலால் தொழில் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் முகமது ஜாவாவி அகமது முக்னி சமூகப் பொருளாதார மேம்பாடு, சமூக நலன், தொழிலாளர் ஆற்றல் ஆட்சிக் குழு உறுப்பினராகவும், இஸ்லாம் அல்லாதோர் சமய விவகார சிறப்புக் குழு இணைத் தலைவராகவும் உள்ள மாண்புமிகு வீ. கணபதிராவும் கலந்து கொண்டனர்.

# ஜெலாஜா சிலாங்கூர் இலவச மருத்துவ முகாம் மட்டுமின்றி ஒரு பன்முக நிகழ்ச்சி இந்தியர்கள் அதில் பங்கு கொண்டு

# பயனடைய வேண்டும்



மோரிப்:-

கடந்த சனிக்கிழமை கோல லங்காட் மாவட்ட ஜெலாஜா சிலாங்கூர் மோரிப் கடற்கரையில் வெகு சிறப்பாக பல விளையாட்டு நிகழ்வுகள், அதிர்ஷ்ட குலுக்கல் அறிவில் ,விவசாய கண்காட்சி களுடன், மருத்துவ முகாம் மற்றும் மாநில அரசினால் மக்களுக்கு வழங்கப்படும் பற்பல சேவைகளின் முகப்பிடங்களும் திறக்கப்பட்டு இருந்தன.

சிலாங்கூர் மக்கள் தேவைப்படும் சேவைகளை எப்படி பெறுவது, என்பது குறித்து விளக்கங்களுடன், தேவைபடுவோருக்கு உடனடியான சேவைகளும் வழங்கப் பட்டது. பல நூறு வெள்ளிகள் மதிப்புள்ள ஒரு முழு மருத்துவ பரிசோதனையை வருகையாளர்களுக்கு இலவசமாக வழங்கியது.

அதில் கலந்து கொண்ட ஒரு பயனிட்டாளரான திரு.பரம் அவர்கள், தனது மனைவி பெயருக்கு வந்த ஒரு கடிதத்தின் விவரம் அறிய அங்கு வந்ததாகவும், அங்கு வந்த தான் இந்த மருத்துவ முகாம் குறித்து அறிந்து கொண்டதுடன், தானும் சில பரிசோதனைகள் செய்து கொண்டதாகவும் கூறினார்.

தனது பார்வை குறைபாடு குறித்து பரிசோதித்து அதன் குறைபாடுகளுக்கான காரணத்தை அறிந்து கொண்டதாகவும். மாநில அரசின் இம்முயற்சியை பாராட்டுவதாகவும், ஆனால் இந்நிகழ்வு குறித்து பொது மக்கள், குறிப்பாக இந்தியர்கள் அதிகம் கலந்து கொள்ளாதது குறித்து தனது ஏமாற்றத்தை தெரிவித்தார். இதுபோன்ற நிகழ்வுகளுக்கு பொதுமக்கள் திரண்டு வர, இது போன்ற நிகழ்வுகளை மக்களிடம் விளம்பர படுத்த வேண்டும் என்றார் அவர்.

இந்தியர்கள் இதுபோன்ற வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். இது ஒரு உத்தமமான சேவை, பலர் நோய் தீவிரம் அடைந்தபின் பல ஆயிரங்களை செலவழித்தும் குணமடையாமல் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

உடல் ஆரோக்கியம் மீது நாம் அனைவரும் அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும் .அதனால் இது போன்ற இலவச மருத்துவ பரிசோதனைகளை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் 74 வயது திரு. பரம்..

# ஜூலை 2 அன்று கோலா சிலாங்கூர் ஸ்டேடியம் உத்தாமாவில் ஜெலாஜா சிலாங்கூர் என்னும் மக்களுக்கு புதிய உதவி திட்டம்

ஷா ஆலம் :-

மக்களுக்கு பல்வேறு புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட முயற்சிகளை அறிமுகப்படுத்தும் சிலாங்கூர் பென்யாயாங் திட்டம், இந்த சனிக்கிழமை கோலா சிலாங்கூர் ஸ்டேடியம் உத்தாமாவில் நடைபெறும்.

காலை 7.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெறும் நிகழ்ச்சியை சுமார் 11 மணிக்கு டத்தோ மந்திரி புசார் டத்தோ' ஸ்ரீ அமிருடின் ஷா கலந்துக் கொள்வார்.

இந்நிகழ்வில் வாணி ஹஸ்ரிதா, ஏரோபிக்ஸ், மக்கள் விளையாட்டுப் போட்டிகள், இ-ஸ்போர்ட்ஸ், இரத்த தானம், கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

சிலாங்கூர் வறுமை ஒழிப்பு திட்ட உதவி, சிலாங்கூர் சிறு தொழில் முனைவோர் நிதி உதவி மற்றும் புஸ்பனிதா திட்டம் மற்றும் சுகாதார மன்றம் ஆகியவற்றின் அடையாள ஒப்படைப்பும் நடைபெறும். அதிகமான மாநில மக்கள் பயன் பெறும் வகையில் பெடுலி ராக்யாட் திட்டத்திற்கு மாற்றாக 35 கோடி வெள்ளி நிதியில் புதிய திட்டங்களை மாநில அரசு அறிமுகப்படுத்துகிறது. சுமார் 25,000 பேர் பயன் பெற்று வந்த கிஸ் எனப்படும் ஸ்மார்ட் சிலாங்கூர் பரிவு அன்னையர் திட்டத்திற்கு பதிலாக 30,000 பேர் பயன்பெறக்கூடிய பிங்காஸ் திட்டம் அமல்படுத்தப்படுகிறது.

இது தவிர, கடும் நோய்களை முன்கூட்டியே கண்டறியும் நோக்கில் மேற்கொள்ளப்படும் சிலாங்கூர் சாரிங் இலவச மருத்துவப் பரிசோதனைத் திட்டத்திற்கு 15 லட்சம் வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஐயாயிரம் பேர் வரை பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த திட்டங்களில் கலந்து சிறப்பிப்பதுடன் , மருத்துவ சோதனை போன்ற உடல் நல த் திட்டங்களில் தவறாது கலந்து , உடல் நிலை பற்றி அறிந்துகொள்ளவும் மக்கள் அழைக்கப் படுகிறார்கள்.



# கோல லங்காட் மோரிப் கடற்கரையில் ஜெலாஜா

## சிலாங்கூர் மாநில உலா திட்டத்தில் பல்வேறு நிகழ்சிகளின் பட காட்சிகள்.




வீ.கணபதிராவ் சமூக பொருளாதார மேம்பாடு, சமூக நலன், தொழிலாளர் ஆற்றல் ஆட்சிக்குழு உறுப்பிரை தலைவராக கொண்ட ஐசீட் எனப்படும் இந்தியர் தொழில் மேம்பாட்டு துறையிடமிருந்து தொழில் உபகரணங்களை பெறும் தொழில் முனைவோர்கள்.



தமிழ்ப்பள்ளிகளுக்கான ஆண்டு மானிய உதவி பெறும் பள்ளிகளின் தலைவர்கள்.





மாநில அரசின் மருத்துவ முகாமில் உடல் பரிசோதனை செய்துக்கொள்ளும் பயனாளிகள்







வீடமைப்பு, நகர்புற நல்வாழ்வு மற்றும் தொழில் முனைவோர் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் மூலம் மாநில சிறு தொழில் நடத்துனர்கள் ஹிஜ்ரா கடனுதவித் திட்டம் மற்றும் பொருள் உதவிகளை பெற்ற தொழில் நடத்துனர்கள்

# சிகிஞ்சான் மாரியம்மன் ஆலயம்



**மலேசியாவைப் பொறுத்த வரை பெரும்பாலான ஆலயங்களின் வரலாறு தோட்டப்புறங்களிலிருந்துதான் தொடங்கும். அதில் சில ஆலயங்களுக்கு மட்டுமே விதிவிலக்கு உண்டு. அந்த வகையில் நெல் வயலை இருப்பிடமாக கொண்டு உருவான வெகு சில ஆலயங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குகிறது பாரிட் 4 சுங்கை பூரோங், சிகிஞ்சான் எனும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்.**

ஒரு புறம் பச்சைப்பசேல் என காட்சியளிக்கும் நெல்வயல். மறுபுறம் ஓங்கி வளர்ந்த தென்னை மரங்கள். இவற்றுக்கு மத்தியில் தரையில் உதித்த சூரியன் போல் தங்க நிறம் பூசிய ஆலயம்.ஆலயம்.

### பிரிட்டிஷார் கொடுத்த ஆயிரம் ஏக்கர் நிலம்

கிசிஞ்சான் வட்டார இந்துக்களின் ஆன்மிக அடையாளமாக விளங்கும் இந்த ஆலயம் சுமார் எழுபது ஆண்டு வரலாற்றைக் கொண்டுள்ளது. 1948 ஆம் ஆண்டில் அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் நெல் விவசாயத்திட்டத்திற்கு நீர்ப் பாசன மற்றும் காட்டு நிலங்கள் பண்படுத்தப்பட்டு ஆர்வம் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முனுசாமி மண்டோர், கே.பி.சுந்தரம் போன்ற தலைவர்கள் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலத்தை இந்தியர்களுக்குப் பெற்றுத் தந்தனர். 1950ஆம் ஆண்டுகளில் அப்பகுதியில் சுமார் 300 குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் நடேசன் என்பருக்குச் சொந்தமான நிலத்தில் சிறிய அம்மன் ஆலயத்தை அமைத்து வழிபாடு நடத்தி வந்தனர்.

### 30 லட்சம் வெள்ளி செலவில் அழகிய ஆலயம்

தொலைநோக்கு கொண்ட அவ்வட்டார இந்துக்கள் ஒன்றுபட்டு மேற்கொண்ட முயற்சியின் வழி ஆலயத்திற்காக 4 ஏக்கர் நிலத்தை வாங்கினர். கடந்த 1967 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆலயம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டுவிழா அமரன் துன் வீ.தி. சம்பந்தன் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 1972 இல் முதல் கும்பாபிஷேகமும் 1984இல் இரண்டாவது கும்பாபிஷேகமும் 1996 இல் மூன்றாவது கும்பாபிஷேகமும் நடத்தப்பட்டது.

புதிய ஆலயத்தை நிர்மாணிப்பதற்காக கடந்த 2014 ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டது. சுமார் 30 லட்சம் வெள்ளி செலவில் அழகிய வடிவில் ஜொலிக்கும் பொன்னிறத்தில் உருவான புதிய ஆலயத்தின் குடமுழுக்கு விழா இவ்வாண்டு ஜூன் மாதம் 13 ஆம் தேதி வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்கு மத்திய அரசு குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றியுள்ள வேளையில் மாநில அரசும் ஆட்சிக்குழு உறுப்பினர் வீ. கணபதி ராவ் மற்றும் சிகிஞ்சான் சட்டமன்ற உறுப்பினரும் மாநில சட்டமன்ற சபாநாயகருமான இங் சுயி லிம் ஆகியோர் மூலம் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளதாக கூறுகிறார் ஆலயத்தின் பொருளாளர் ஜி.கே. நடராஜன் கூறினார்.

ஆலயத்தின் பல்வேறு நடவடிக்கைகளுக்கு மாநில அரசு கட்டங் கட்டமாக கிட்டத்தட்ட ஒரு லட்சம் வெள்ளி வரையில் வழங்கியுள்ளது. மத்திய மற்றும் மாநில அரசுகள் தவிர்த்து கொடை நெஞ்சர்கள் மற்றும் பொதுமக்கள் வழங்கிய நன்கொடையின் மூலம் இந்த ஆலயத்தை அழகிய வடிவில் உருவாக்க முடிந்துள்ளது என்று அவர் சொன்னார்.

### சமயப் பணிகளுடன் சமுதாயப் பணிகளையும் ஆற்றுகிறது

இந்த ஆலயத்தின் உருவாக்கத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் இவ்வட்டார முன்னோர்கள் ஆற்றிய பங்கினை மறக்க முடியாது. அப்போதே ஆலயத்திற்கு நான்கு ஏக்கர் நிலத்தை வாங்கிய அவர்களின் தொலைநோக்கு சிந்தனையை மறக்க இயலாது.

இவ்வட்டாரத்திலுள்ள சுமார் 200 குடும்பங்களின் காக்கும் தெய்வமாக விளங்கி வரும் அம்மனுக்கு ஆண்டுதோறும் ஆடிமாத திருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்படும் என்று அவர் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள இதரப் பல ஆலயங்களைப் போலவே இந்த ஆலயமும் சமயப் பணிகளையும் சமுதாயப் பணிகளையும் இரு கண்களாக கருதி செயல்பட்டு வருகிறது. மலேசிய இந்து தர்ம மாமன்றம் மற்றும் கோல சிலாங்கூர் அருள் நிலையத்தின் ஆதரவுடன் சமய வகுப்புகள் மற்றும் சமய சொற்பொழிவு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம்.

சுமார் 500 பேர் அமரக்கூடிய மண்டபத்தை சீரமைப்போம்

புதிய ஆலயத்தில் வசதிகள் பெருகியுள்ள நிலையில் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள், தன்முனைப்பு பயிற்சிகள், சிலம்ப கலை பயிற்சி போன்ற நிகழ்வுகளை நடத்தவும் திட்டமிட்டிருக்கிறோம் என்றார் அவர்.

ஆலய வளாகத்திலுள்ள சுமார் 500 பேர் அமரக்கூடிய மண்டபத்தை சீரமைக்கும் திட்டத்தை தாங்கள் கொண்டிருப்பதாக கூறிய அவர், அத்திட்டம் செயல்படுத்தப்பட்டவுடன் மேலும் பல்வேறு திட்டங்களை அமல் செய்வதற்குரிய வாய்ப்பு கிட்டும் என அவர் குறிப்பிட்டார்.

கோவிட்-19 பெருந்தொற்று பரவலின் போது சிகிஞ்சான், கோல சிலாங்கூர், சுங்கை பூரோங் மற்றும் பெஸ்தாரி ஜெயாவில் சுமார் 500 குடும்பங்களுக்கு உணவுப் பொட்டலங்கள் உள்ளிட்ட உதவிகளை வழங்கினோம்.

அதே போல் கடந்தாண்டு இறுதியில் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட கோல சிலாங்கூர் வட்டார மக்களுக்கும் உணவு சமைத்து வழங்கியதோடு அவர்களுக்கு தேவையான உதவிகளையும் செய்தோம். இவ்விரு உதவித் திட்டங்களையும் இந்து தர்ம மாமன்றம், அரசு சாரா அமைப்புகள் மற்றும் சற்று வட்டார ஆலயங்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டன.

**SELANGOR INDRU**

*Sidang pengarang*

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A. Pakyanathan

**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof
Hafiz Othaman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat,
No.1, Jalan Indah 14/8,
Seksyen 14, 40000 Shah Alam,
Selangor**

*Tel : 03-55234856*
*Faks: 03-55235856*
*Email : info@mediaselangor.com*

# பெ.ஜெயா மாநகர் மன்றத்தின் நிறைவு விழா: 150 குடும்பங்களுக்கு உதவி பொருள் விநியோகம்




பெட்டாலிங் ஜெயா:-

பெட்டாலிங் ஜெயா மாநகர் மன்றத்தின் 16ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி வசதி குறைந்த 150 குடும்பங்களுக்கு உணவுக் கூடைகள் வழங்கப்பட்டன. கோவிட்-19 பெருந்தொற்று தாக்கம் காரணமாக பாதிப்பை எதிர்நோக்கியுள்ள அத்தரப்பினரின் சுமையை ஓரளவு குறைக்கும் நோக்கில் தலா 130 வெள்ளி மதிப்பிலான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டதாக மாநகர் மன்ற டத்தோ பண்டார் அஸான் முகமது அமிர் கூறினார்.

நோய் காரணமாக படுத்த படுக்கையாக இருப்பவர்கள், தனித்து வாழும் தாய்மார்கள், மூத்த குடிமக்கள் அதிகமானோரை பராமரிக்கும் நிலையில் உள்ளவர்கள் மற்றும் மாதம் 2,000 வெள்ளிக்கும் குறைவாக வருமானம் பெறுபவர்களுக்கு இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டதாக அவர் சொன்னார்.

இன்றைய நிகழ்வில் 22 பேருக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்ட வேளையில் எஞ்சியோர் அடுத்த வாரம் இப்பொருள்களை பெறுவர் என்று அவர் குறிப்பிட்டார். உணவுக் கூடைகள் தவிர்த்து மின்சார சாதனங்கள் மற்றும் சமையலறை உபகரணங்களையும் வழங்குகிறோம். வசதி குறைந்தவர்களிடம் பரிவை புலப்படுத்தும் விதமாகவும் பொதுமக்களுடன் நட்புறவை பேணும் வகையிலும் இந்த திட்டம் அமல்படுத்தப்படுகிறது என்றார் அவர். இங்குள்ள லெம்பா சுபாங், மக்கள் வீடமைப்புத் திட்டத்தில் இந்த உதவிப் பொருள்களை விநியோகம் செய்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

# பயனர்களின் வசதிக்காக பூலாவ் இண்டாவில் 571 எல்இடி விளக்குகளை நிறுவும்

ஷா ஆலம்:-

கிள்ளானில் உள்ள பூலாவ் இண்டா நெடுஞ்சாலையின் ஒரு பகுதியில் மொத்தம் 571 யூனிட் சோலார்-பவர் லைட் எமிட்டிங் டையோட் (எல்இடி) தெரு விளக்குகள் நிறுவப்பட்டிருப்பது வழியைப் பயன் படுத்துபவர்களுக்கு வசதியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போர்ட் கிள்ளான் மாநில சட்டமன்ற உறுப்பினர் அஸ்மிஸாம் ஜமான் ஹுரி கூறுகையில், இன்னும் இருட்டாக இருக்கும் பகுதிகளில் இதேபோன்ற வசதிகளை நிறுவுவது அடுத்த கட்டத்தில் தேவைகளைப் பொறுத்து ஏற்பாடு செய்யப்படும் என்றார்..



"571 யூனிட் சோலார் விளக்குகள் நன்றாக வேலை செய்து தரநிலையை எட்டினால், ஜே.கே.ஆர் சிலாங்கூர் இன்னும் இருட்டாக இருக்கும் பாதையில் அடுத்த கட்டத்தில் நிறுவலைத் தொடரும்" என்று அவர் ஜூன் 15 அன்று கூறினார்.

அஸ்மிஸாமின் கூற்றுப்படி, போர்ட் கிள்ளானைச் சுற்றியுள்ள 742 லைட்டிங் யூனிட்களின் தரத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு ஜே.கே.ஆர் இன் விவரக்குறிப்புகளின் அடிப்படையில் எல்இடி தெரு விளக்குகளின் மாதிரிகள் மற்றும் பிராண்டுகளின் தேர்வு செய்யப்பட்டது.



# நமது கவுன்சிலர் - பொ.மாரியம்மாள்

### (செலாயாங் நகராண்மைக் கழகம்)

செலாயாங் நகராண்மை கழக உறுப்பினரான திருமதி மாரியம்மாள் த/பெ பி.எஸ். பொன்னுசாமி இம்மாதம் நமது கவுன்சிலர் அங்கத்தில் வலம் வருகிறார். ஜனநாயக செயல் கட்சியின் பிரதிநிதியான இவர், கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் நகராண்மைக் கழக உறுப்பினர் பொறுப்பினை ஏற்று பணியாற்றி வருகிறார்.

செலாயாங் நகராண்மைக் கழகத்தில் ஜாலான் பத்து ஆராங், பண்டார் கன்றி ஹோம்ஸ், புத்ரி ஹைட்ஸ், கோத்தா பிடாரி, சவுஜானா ரவாங், சுங்கை பாக்காவ் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய 17வது மண்டலத்திற்கு இவர் பொறுப்பேற்றுள்ளார். தனது அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதிகளில் நிலவும் அடிப்படை வசதிப் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் தாம் முழு கவனம் செலுத்தி வருவதாக திருமதி மாரியம்மாள் கூறினார். குறிப்பாக போக்குவரத்து நெரிசல், சட்டவிரோதமாக குப்பைகளை கொட்டுவது உள்ளிட்ட பிரச்னைகளை நகராண்மை கழகத்தின் கவனத்திற்கு கொண்டுச் சென்று உரிய முறையில் தீர்வு கண்டு வருகிறோம்.

,இது தவிர, பல்மா அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் சுமார் 4,000 குடும்பங்கள் மற்றும் மாணவர்களின் வசதிக்காக ஜாலான் டேசா ரியாவில் சைக்கிளோட்டிகள் மற்றும் பாதசாரிகளுக்கான பிரத்தியேக தடத்தை அமைப்பதற்கு நகராண்மை கழகத்திடம் பரிந்துரைத்துள்ளோம் என அவர் சொன்னார்.

வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள வசதி குறைந்தவர்களுக்கு ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவின் பெருமுயற்சியல் வர்த்தக உபகரணங்கள் பெற்றுத் தரப்பட்டுள்ளது. மேலும், இவ்வட்டாரத்திலுள்ள பள்ளிகள் மற்றும் ஆலயங்களுக்கும் தேவையான உதவிகள் ஆட்சிக்குழு உறுப்பினர் மூலம் பெற்றுத் தரப்படுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். கோவிட்-19 பெருந்தொற்று பரவலின் போது தமது பகுதியைச் சேர்ந்த சுமார் 700 வசதி குறைந்த குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன என்றும் திருமதி மாரியம்மாள் சொன்னார்.

# யாவாஸ் மற்றும் கல்வித்துறை இணைந்து சிறப்பு குழந்தைகள் திட்டத்தை தீவிரப்படுத்துகிறது

ஷா ஆலம்:-

சிலாங்கூர் மாநிலக் கல்வித் துறையுடன் (ஜேபிஎன்எஸ்) யாயாசான் வாரிசான் அனாக் சிலாங்கூர் (யாவாஸ்) இன்று கையெழுத்திட்ட ஒத்துழைப்பைத் தொடர்ந்து மேலும் சிறப்பு குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. சிலாங்கூர் சிறப்பு குழந்தைகள் துறையின் (அனிஸ்) தலைவர் அவர்களில் அனிஸ் ஆசிரியர் திட்டமும் பள்ளிகளில் உள்ள சவால்களுக்கு ஏற்ற புதிய முறைகளைப் பயன்படுத்தி ஆசிரியர் மேம்பாட்டை மேம்படுத்தும் முயற்சியாகும் என்றார். "இந்த சிறப்புக் குழந்தைகளின் கல்வி மற்றும் தரத்தை மேம்படுத்துவது ஆசிரியர்களால் சுமக்கப்படும் கடினமான பணியாகும்.



"எனவே, யாவாஸ் மூலம் மாநில அரசு ஆசிரியர்களின் தற்போதைய அறிவு மற்றும் திறன்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் அவர்களுக்கு உதவ முன்முயற்சி எடுத்தது" என்று டேனியல் அல்-ரஷிட் ஹரோன் ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

கற்றல் சிரமங்களை எதிர்கொள்ளும் 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கான (ஓகேயு) ஆதரவு மையத்தை நிறுவ நெட்வொர்க் ஒப்புக்கொண்டதாக அவர் கூறினார். இதற்கிடையில், கேஜபி ஹோட்டல் செலாயாங்கில் நடந்த விழாவை பெண்கள் மற்றும் குடும்ப மேம்பாட்டு ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் நடத்தினார் மற்றும் 97 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர் என்று டேனியல் கூறினார்.

# சமூகத் தலைவரை அறிவோம்

# ஐ.பத்மநாபன்

## (கோத்தா கெமுனிங் தொகுதி)

இந்தியர்கள் கணிசமான அளவு வசிக்கும் தொகுதிகளில் ஒன்றாக கோத்தா கெமுனிங் சட்டமன்றத் தொகுதி விளங்குகிறது. சுமார் 17 விழுக்காடு இந்தியர்களை உள்ளடக்கிய இந்த தொகுதியில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் நியமிக்கப்பட்டுள்ள இரு இந்திய சமூகத் தலைவர்களில் ஒருவராக விளங்குகிறார் பத்மநாபன் த/பெ ஐயனாரப்பன்.

தாமான் செந்தோசா ஜாலான் டத்தோ அப்துல் ஹமிட் ஜசெக கிளைத் தலைவரான இவர் கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் கோத்தா கெமுனிங் தொகுதிக்கான இந்திய சமூகத் தலைவராக இருந்து வருகிறார்.

கோத்தா கெமுனிங், தாமான் ஸ்ரீ மூடா, புக்கிட் கெமுனிங் ஆகிய பகுதிகள் தனது பார்வையின் கீழ் உள்ள நிலையில் இங்கு பொது மக்கள் எதிர்நோக்கும் அடிப்படை வசதிப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில் மாநில அரசின் உதவித் திட்டங்களை கொண்டுச் சேர்ப்பதில் தாம் முக்கிய கவனம் செலுத்துவது அவர் சொன்னார்.

கிஸ் மருத்துவ அட்டை, சொக்சோ, சமூக நல உதவி, ஐ-சீட் போன்ற திட்டங்களுக்கு விண்ணப்பம் செய்வதில் பலருக்கு உதவி புரிந்துள்ளோம். இந்த முயற்சிகளின் வாயிலாக கடந்த மூன்று ஆண்டுகளில் 42 பேர் கிஸ் மருத்துவ அட்டையைப் பெற்றுள்ள வேளையில் ஐ-சீட் வர்த்தக உபகரண உதவித் திட்டம் மூலம் இத்தொகுதியில் எண்மரும் புளுப்ரிண்ட் எனப்படும் பெருந்திட்டம் மூலம் நால்வரும் உதவிகளைப் பெற்றுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.



இத்தொகுதியில் கணிசமானோர் சொந்த லோட் நிலங்களில் வசித்து வருகின்றனர். அவர்கள் எதிர் நோக்கும் சாலை, கால் வாய் மற்றும் குப்பை அகற்றுவது தொடர்பான பிரச்னை களுக்கு கட்டங் கட்டமாக தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம் என அவர் கூறினார்.

மாநில அரசின் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கும் நோக்கில் அடுத்த மாதம் தாமான் ஸ்ரீ மூடாவில் மக்கள் சந்திப்பு நிகழ்வுக்கும் தாம் ஏற்பாடு செய்துள்ளதாக பத்மநாபன் தெரிவித்தார்.

# நாட்டில் அதிகரித்து வரும் ஊழல் விரைந்து நடவடிக்கை எடுக்க பக்கத்தான் கூட்டணி வலியுறுத்து

ஷா ஆலம்:-

நாட்டில் ஊழல் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வது குறித்து பக்கத்தான் ஹராப்பான் கூட்டணி கவலையும் சினமும் அடைந்துள்ளது.

சத்து மலேசியா டெவலப்மெண்ட் பெர்ஹாட் (1எம்டிபி) இயக்குநர் வாரிய உறுப்பினர் என்ற முறையில் முன்னாள் அரசாங்கத் தலைமைச் செயலாளர் மாதம் 30,000 வெள்ளியை வருமானமாக பெற்று வந்தது தொடர்பில் ஆக சமீபத்தில் வெளியான செய்தியை அது சுட்டிக் காட்டியது.

1எம்டிபி இயக்குநர் வாரியக் கூட்டம் நடைபெறாத போதிலும் தாம் மாதந்தோறும் அந்த கட்டணத்தைப் பெற்று வந்ததாக டான்ஸ்ரீ முகமது சீடேக் ஹசான் கூறியிருந்தார்.

முகமது சீடேக்கின் இந்த வாக்குமூலம் பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது.

ஏனென்றால், 1எம்டிபி யிடமிருந்து அவர் கட்டணம் பெற்ற போது அரசாங்கத் தலைமைச் செயலாளராகவும் பதவி வகித்து வந்துள்ளார் என பக்கத்தான் தலைவர் மன்றம் தெரிவித்தது.

மேலும் வேதனையைக் தரக்கூடிய மற்றொரு செய்தி என்னவென்றால் அம்னோ தலைவர் டத்தோஸ்ரீ அகமது ஜாஹிட் ஹமிடி மாதந்தோறும் 63,543 வெள்ளி முதல் 16 லட்சத்து 50 ஆயிரம் வெள்ளியை பெற்று வந்ததுதான்.இது தவிர, சுகாதார அமைச்சர் கைரி ஜமாலுடின் ரெம்பாவ் அம்னோ டிவிஷன் வாயிலாக வெ. 50,000 முதல் வெ. 200,000 வரை பெற்றதாக அல்ட்ரா கிரானா சென்.பெர்ஹாட் நிறுவன முன்னாள் இயக்குநர் அம்பலப்படுத்தியுள்ளார்.

இவ்விரு சம்பவங்களும் மிகவும் வேதனையளிக்கும் வகையில் உள்ளன. இந்த ஊழல் நடவடிக்கைகளில் அரசியல் தலைவர்கள் மட்டுமின்றி பொதுச் சேவைத் துறையில் முக்கிய பொறுப்பை வகிப்பவர்களும் சம்பந்தப்பட்டுள்ளனர்.

ஊழலை துடைத்தொழிப்பதில் தங்களின் கடப்பாட்டை பக்கத்தான் கூட்டணி மறு உறுதிப்படுத்த விரும்புகிறது. ஆகவே, சில நடவடிக்கைகளையும் சீர்திருத்தங்களையும் அரசாங்கம் உடனடியாக அமல்படுத்த வேண்டும்.

அரசியல் நிதியளிப்புச் சட்ட மசோதாவை வரைவது மற்றும் மலேசிய ஊழல் தடுப்பு ஆணையத்தை நாடாளுமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் கொண்டு வருவது ஆகியவையும் அதில் அடங்கும் என பக்கத்தான் தலைவர் மன்றம் கூறியது.

# கால்நடை தீவன இறக்குமதிக்கான அனுமதி கட்டணத்தை மாஃபி நிறுத்தி வைத்துள்ளது

புத்ராஜெயா:-

சோளம், சோயா, கோதுமை மற்றும் பிற விலங்குகள் மற்றும் தாவர அடிப்படையிலான தீவனங்கள் இறக்குமதியை எளிதாக்கும் வகையில் நான்கு கால்நடை தீவனங்களுக்கான அனுமதி கட்டண வசூல் நிறுத்தப்பட்டுள்ளது, வேளாண் மற்றும் உணவுத் தொழில் அமைச்சகம் (மாஃபி) அறிவித்துள்ளது. சோளம், கோதுமை மற்றும் சோயாவிற்கு முன்பு விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டணம் ஒரு அனுமதி விண்ணப்பத்திற்கு சுஆ15 ஆகும், மற்ற விலங்குகளுக்கு மற்றும் தாவர அடிப்படையிலான தீவன அனுமதிகள் ஒரு விண்ணப்பத்திற்கு வெ.20 ஆகும்.

மாஃபி, இன்று ஒரு அறிக்கையில், கால்நடைத் தொழிலில் தீவனத்திற்கான மூலப் பொருட்களின் அதிக விலை உள்ளூர் சந்தையில் முழு கோழி போன்ற உணவு விலைகள் அதிகரிப்பதற்கான காரணிகளில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

"கால்நடை உணவுக்கான மூலப்பொருட்களில் பெரும்பாலானவை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்தப் பொருட்களின் இறக்குமதிக்கான அனுமதிக் கட்டண வசூலை நிறுத்தி வைப்பது, நாட்டில் தீவன விலையை நிலைநிறுத்தும் முயற்சியில் தளவாடச் செலவுகளைக் குறைக்க உதவும்," என்று மாஃபி கூறியது.



மலேசிய தனிமைப்படுத்தல் மற்றும் ஆய்வு சேவைகள் துறை (மாகிஸ்) இறக்குமதி செயல் முறைகளை நெறிப்படுத்தவும், தளவாடச் செலவுகளைக் குறைக்கவும், நாட்டின் நுழைவுப் புள்ளிகளில் உள்ள பொருட்களுக்கான விரைவான நுழைவு செயல்முறையையும் செயல்படுத்தும் என்று மாஃபி கூறியது.

# ஜூலை முதல் தேதி முதல் சமையல் எண்ணெய்க்கான உதவித் தொகை, கோழிக்கான உச்சவரம்பு விலை ரத்து

ஷா ஆலம்:-

போத்தல்களில் அடைக்கப்பட்ட அசல் சமையல் எண்ணெய்க்கான உதவித் தொகையை ரத்து செய்ய அரசாங்கம் முடிவு எடுத்ததற்கு அத்தொழில் துறையைச் சேர்ந்தவர்களும் வணிகர்களும் முறைகேட்டில் ஈடுபட்டதே காரணம் என்று பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் கூறினார்.

இந்த உதவித் தொகையினால் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டிய செலவுத் தொகையின் மதிப்பு கடந்தாண்டு 250 கோடி வெள்ளியாக இருந்த வேளையில் இவ்வாண்டு அது 400 கோடி வெள்ளியாக உயர்ந்து விட்டதாக அவர் சொன்னார். சமையல் எண்ணெய்க்கான உதவித் தொகை திட்டத்தில் முறைகேடுகள் நிகழ்வது கண்டறியப்பட்டுள்ளது. அரசாங்கம் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாத பட்சத்தில் அந்த உணவுப் பொருளுக்கு இனியும் உதவித் தொகை வழங்குவதில் அர்த்தமில்லை என்று அவர் தெரிவித்தார். எனினும், மாதம் ஒன்றுக்கு 60,000 மெட்ரிக் டன் என்ற அடிப்படையில் பிளாஸ்டிக் பைகளில் அடைக்கப்பட்ட ஒரு கிலோ சமையல் எண்ணெய்க்கான உதவித் தொகையை அரசாங்கம் தொடர்ந்து வழங்கி வரும் என்றும் அவர் உறுதியளித்தார்.O



# புதிய அத்தியாயத்தின் தொடக்கப் புள்ளி

# தாமான் செந்தோசா தமிழ்ப்பள்ளி

- **நாடு சுதந்திரத்திற்கு முன்பு 1200 தமிழ்ப்பள்ளிகளாக இருந்தது ஏன் 524 ஆக குறைந்தது?**
- **நீண்ட நாட்களாகப் பாரிசான் அரசிடமிருந்து ஒரு புதிய தமிழ்ப்பள்ளிக்கு கூட வராத அங்கீகாரம், 2008ம் ஆண்டுக்கு பின் எப்படி வந்தது? அதுவும் ஆறு பள்ளிகளுக்கு! முன்னால் பிரதமர் நஜிப் துன் ராசாக் எப்படி கொடுத்தார்? ஏன் கொடுத்தார் ?**
- **இந்திய சமுதாயம் விழித்துக்கொண்டது என்பனை அம்னோ உணர்ந்ததால் அவர்கள் சிறு மீனை கொடுத்து பெரிய மீனை பிடிக்க நினைத்தார்கள்.**
- **கடந்த 27-06-2011ல் நாடாளுமன்றத்தில் இந்திய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட வட்ட மேஜை மாநாட்டிலும் செந்தோசா பள்ளிக்கான அனுமதி மீதான விவாதத்தை முக்கிய அம்சமாக்கினார்கள். அனுமதியை கொடு நாங்கள் கட்டிக்கொள்கிறோம், என நாடாளுமன்ற வட்டமேஜையில் பக்காத்தான் கூட்டணி முழுங்கியது.**
- **தேர்தல் காலத்தில் இப்பிரச்சனை விசுவரூபம் எடுப்பதைத் தடுக்கவும், தமிழ்ப்பள்ளிக்கு அனுமதியை கொடுத்து, 13வது பொதுத்தேர்தலில் இந்தியர்களை தன் பக்கம் இழுக்கும் அரசியல் யுக்தியே பிரதமரின் பூச்சோங் கின்ரார தமிழ்ப்பள்ளியில் ஆறு தமிழ்ப்பள்ளிக்கான அறிவிப்பும், அனுமதியும்.**

மலேசிய திருநாட்டில் தமிழ்ப்பள்ளிகளுக்கு சுமார் 200 ஆண்டுகால வரலாறு உண்டு. தொடக்க காலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகள் இயங்கி வந்தன. ஆயினும் பல்வேறு காரணங்களால் அந்த அந்த எண்ணிக்கை படிப்படியாக குறைந்து அதில் பாதி அளவு பள்ளிகளே இப்போது இயங்கி வருகின்றன.

இந்த எண்ணிக்கை வீழ்ச்சி சமுதாயத்தின் மத்தியில் தமிழ்ப்பள்ளிகளின் எதிர்காலம் மீதான கவலையை ஏற்படுத்தியது. இந்நிலையில்தான் புதிதாக ஆறு தமிழ்ப்பள்ளிகள் கட்டப்படும் என்று சில ஆண்டுகளுக்கு முன்னர் அரசாங்கம் அறிவிப்பை வெளியிட்டது.

அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு, தமிழ்ப்பள்ளிகளின் வரலாற்றில் இரண்டாம் அத்தியாயம் தொடங்கப்படுவதற்கான தொடக்கப் புள்ளியாக அமைந்தது. தமிழ்ப்பள்ளிகளுக்கு ஏற்றமிகு எதிர்காலம் இந்நாட்டில் இன்னும் இருக்கிறது என்ற நம்பிக்கையை விதையும் துளிர்க்க வைத்தது.

அரசாங்கம் அறிவித்த அந்த ஆறு பள்ளிகளில் ஒன்றுதான் கிள்ளான், தாமான் செந்தோசா தமிழ்ப்பள்ளி. நாட்டின் 525 ஆவது தமிழ்ப்பள்ளி என்ற அடைமொழியை தாங்கி கம்பீரமாக காட்சியளிக்கிறது இப்பள்ளி.

இந்தியர்கள் அதிகம் வசிக்கும் தாமான் செந்தோசாவில் தமிழ்ப்பள்ளி இல்லாத நிலையில் இங்குள்ள மாணவர்கள் அருகிலுள்ள சிம்பாங் லீமா தமிழ்ப்பள்ளி மற்றும் பத்து அம்பாட் தமிழ்ப்பள்ளிக்கு செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

தாமான் செந்தோசாவில் தமிழ்ப்பள்ளி வேண்டும் என்ற கோரிக்கை எழுந்த நிலையில் சிலாங்கூரில் புதிதாக ஆட்சிக்கு வந்த மக்கள் கூட்டணி அரசாங்கம் தமிழ்ப்பள்ளியின் நிர்மாணிப்புக்காக தாமான் செந்தோசாவில் 2.7 ஏக்கர் நிலத்தை கடந்த 2009 ஆம் ஆண்டில் ஒதுக்கியது.

எனினும், பல்வேறு காரணங்களால் மாநில அரசு ஒதுக்கிய அந்த நிலத்தில் பள்ளி நிர்மாணிக்கப்படவில்லை. அதற்கு பதிலாக தாமான் செந்தோசாவின் மற்றொரு பகுதியில் அதாவது லோரோங் உலுபாலாங்கில் 4 ஏக்கர் நிலப்பரப்பில் 26 லட்சம் வெள்ளி செலவில் புதிய பள்ளி நிர்மாணிக்கப்பட்டு கடந்த 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது.

இப்பள்ளியின் நிர்மாணிப்பின் வழி செந்தோசா வட்டாரத்திலுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை தொலைவிலுள்ள பள்ளிக்கு அனுப்புவதில் எதிர்நோக்கி வந்த சிரமம் தவிர்க்கப்பட்டுள்ளதாக இப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் தங்கராஜா கூறுகிறார்.

நான்கு மாடிகளைக் கொண்ட கட்டிடத் தொகுதிகளைக் கொண்ட இப்பள்ளி சுமார் 700 மாணவர்களையும் 39 ஆசிரியர்களையும் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் 525 வது தமிழ்ப்பள்ளி என அடையாளப்படுத்தப்பட்ட இப்பள்ளி 24 வகுப்பறைகள், இரு அறிவியல் கூடங்கள், இரு தகவல் தொழில்நுட்ப மையங்கள், ஆசிரியர் அறை, புறப்பாட நடவடிக்கை அறை உள்ளிட்ட நவீன பள்ளிக்குரிய அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது.

இப்பள்ளி மாணவர்கள் கல்வியிலும் புறப்பாட நடவடிக்கைகளிலும் சிறந்து விளங்குகிறது. கடந்த 2019 ஆம் ஆண்டு யு.பி.எஸ்.ஆர். தேர்வில் இப்பள்ளியில் 69 விழுக்காட்டு மாணவர்கள் சிறப்பான அடைவு நிலையைப் பதிவு செய்தனர் என்று தங்கராஜா கூறினார்.

இந்த பள்ளி பிரத்தியேக மாணவர்களுக்கான சிறப்பு வகுப்பையும் கொண்டுள்ளது. கிள்ளான் மாவட்டத்திலேயே இத்தகைய பிரத்தியேக வகுப்பு வசதி கொண்ட ஒரே பள்ளியாக செந்தோசா தமிழ்ப்பள்ளி விளங்குகிறது. இந்த வகுப்பு 14 மாணவர்கள் இரு ஆசிரியர்கள் ஒரு உதவியாளரைக் கொண்டு செயல்பட்டு வரும் வேளையில் அடுத்தாண்டில் மேலும் ஒரு வகுப்பைத் தொடக்க திட்டமிட்டுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

அதே போல் இப்பள்ளியில் பாலர் பள்ளி இல்லாத குறையைப் போக்கும் வகையில் அடுத்தாண்டில் பாலர் பள்ளியை தொடக்கும் திட்டத்தையும் தாங்கள் கொண்டிருப்பதாக அவர் சொன்னார்.

இப்பள்ளியை மத்திய அரசு நிர்மாணித்துக் கொடுத்தாலும் அதன் தொடர்ச்சியான மேம்பாட்டுப் பணிகளுக்காக மாநில அரசும் தொடர்ந்து உதவிகளை நல்கி வருகிறது. மாநில அரசு ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் வாயிலாக கடந்த 2019 இல் 75,000 வெள்ளியும் 2020 இல் 75,000 வெள்ளியும் மூன்றாவது முறையாக கடந்தாண்டில் 70,000 வெள்ளியும் வழங்கப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

இப்பள்ளி மாணவர்களின் கல்வியில் மட்டுமின்றி அவர்களின் சமூக, பொருளாதார விஷயங்களிலும் கவனம் செலுத்தி வருகிறது. ஈராண்டுகளுக்கு முன்னர் நாட்டில் கோவிட்-19 பெருந்தொற்று ஏற்பட்ட போது வசதி குறைந்த 200 மாணவர்களுக்கு உணவுப் பொருள்கள், பள்ளிச் சீருடைகள் மற்றும் புத்தகங்களை பள்ளியின்




பெற்றோர் ஆசிரியர் சங்கம் வாயிலாக வழங்கியதோடு இத்திட்டத்தை கடந்த மூன்றாண்டுகளாக தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம் என்றார் அவர்,

இது தவிர, முழு நடமாட்டக் கட்டுப்பாடு விதிக்கப்பட்ட காலங்களில் மூன்று முறை வசதி குறைந்த 500க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு உணவு சமைத்து விநியோகம் செய்தோம்.

இப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் குடும்பங்களின் இறப்புகள் நிகழும் பட்சத்தில் மரண சகாய நிதியாக அக்குடும்பங்களுக்கு 300 வெள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கம் மூலம் வழங்கப்படுவதாக தங்கராஜா மேலும் குறிப்பிட்டார்.

# வெளிநாட்டு விசா முறையில் 'சந்தேகத்திற்குரிய' ஒப்பந்தம் செய்தது தொடர்பாக நிறுவனத்தை விசாரிக்க அன்வார் வலியுறுத்து

ஷா ஆலம்:-

சந்தேகத்திற்கிடமான முறையில் அரசாங்க ஒப்பந்தங்களைப் பெற்றதாகக் கூறப்படும் அல்ட்ரா கிரானா எஸ்டிஎன் பிஎச்டி (யுகேஎஸ்பி) மீது மலேசிய ஊழல் எதிர்ப்பு ஆணையம் (எம்ஏசிசி) விசாரணை நடத்த டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிம் வலியுறுத்தியுள்ளார். அமைச்சர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட விஷயம் தொடர்பில் பிரதமர் மற்றும் மனித வள அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

"இந்த விவகாரம் தொடர்ந்து முறைகேடுகள் தொடர்பான பிரச்சினைகளை நிர்வகிப்பதில் அரசாங்கத்தின் மீது மக்கள் மத்தியில் நம்பிக்கையை குலைத்து வருகிறது மற்றும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது," என்று அவர் ஒரு ஊடக அறிக்கையில் தெரிவித்தார். யுகேஎஸ்பி என்பது வெளிநாட்டு விசா முறை தொடர்பாக முன்னாள் துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ அகமட் ஜாஹிட் ஹமிடி சம்பந்தப்பட்ட நீதிமன்ற விசாரணையில் குறிப்பிடப்பட்ட ஒரு நிறுவனம் ஆகும்.

இதற்கிடையில், ஜாஹிட் வழக்கு விசாரணையில் சாட்சிகளின் சாட்சியத்தில் பணம் பெற்றதாகக் கூறப்படும் பெயர்கள் குறித்த விசாரணையை எம்ஏசிசி திறக்கும் என்று பெரித்தா ஹரியான் தெரிவித்துள்ளது.

விசாரணையில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட லெட்ஜரில் பட்டியலிடப்பட்ட நபர்களுக்கு எதிரான புகார்கள் கிடைத்ததை ஆணையம் உறுதிப்படுத்தியது.






## இந்த ஆண்டின் முதல் காலாண்டில் இ.பி.எஃப். வெ.158.5 கோடி மொத்த முதலீட்டு வருமானம் பதிவு

கோலாலம்பூர்:-

மார்ச் 31, 2022 இல் முடிவடைந்த முதல் காலாண்டில் ஊழியர் சேம நிதி (இ.பி.எஃப்.) மொத்த முதலீட்டு வருமானம் ரிம.158.5 கோடியைப் பதிவு செய்து, 2021 ஆம் ஆண்டின் அதே காலாண்டில் பதிவு செய்யப்பட்ட வெ.192.9 கோடியிலிருந்து குறைந்துள்ளது. இது உலக சந்தைகளில் குறிப்பிடத்தக்க சரிவைக் காட்டுகிறது.

தலைமை நிர்வாக அதிகாரி டத்தோஸ்ரீ அமீர் ஹம்சா அஜிசான், இ.பி.எஃப். முதல் காலாண்டில் வலுவாகத் தொடங்கியது, ஆனால் உலகளாவிய சந்தைகள் சரிந்ததால் நிலைமை கடுமையாக மாறியது, இதன் விளைவாக முதல் காலாண்டின் எஞ்சிய பத்திரங்கள் மற்றும் பங்குகளில் குறைந்த வருமானம் கிடைத்தது.

"புவிசார் அரசியல் பதட்டங்கள் மற்றும் அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் வட்டி விகிதங்களின் தாக்கம் ஆகியவற்றிலிருந்து உருவான பல விளைவுகள் இந்த சரிவுக்குக் காரணம். "ரஷ்யா- உக்ரேனியப் போர் நிலைமையை மோசமாக்கியுள்ளது, மேலும் தொற்றுநோய் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள அதிக கடன் சுமைகள் மற்றும் பொது நிதிகளில் இருந்து மீள்வதற்கு நாடுகள் இன்னும் போராடிக்கொண்டிருக்கும் நேரத்தில் தொடர்ந்து நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது" என்று அவர் ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

இ.பி.எஃப். இன் வருமானத்திற்கு முக்கிய பங்களிப்பாக இருந்த பங்குகளின் வருமானம் சந்தை மந்தநிலையால் பாதிக்கப்பட்டாலும் கூட இ.பி.எஃப். அதன் போர்ட்ஃபோலியோ நிலையைப் பயன்படுத்தி கூடுதல் லாபத்தை ஈட்ட முடிந்தது என்று அவர் கூறினார். இ.பி.எஃப். இன் படி, மதிப்பாய்வுக்கு உட்பட்ட காலாண்டில், பங்குகள் ரிம.1,046 கோடி பங்களித்தன, இது மொத்த முதலீட்டு வருவாயில் 66 விழுக்காடாகும்.

காலாண்டில் பட்டியலிடப்பட்ட பங்குகளுக்கு மொத்தம் ரிம.109 கோடி எழுதப்பட்டது, இது 2022 இன் முதல் காலாண்டில் பெற்ற மொத்த நிகர முதலீட்டு வருவாயை வெ.1,476 கோடியாகக் கொண்டு வந்தது.

ஓய்வூதிய நிதியின்படி, சொத்து மற்றும் உள்கட்டமைப்பு அதே காலகட்டத்தில் ரிம.71 கோடியில் இருந்து ரிம.36 கோடியாக குறைந்துள்ளது. மார்ச் 2022 வரை, இ.பி.எஃப். இன் மொத்த முதலீட்டு சொத்துகள் ரிம.10,200 கோடியாக அதிகரித்துள்ளதாகவும், அதில் 37 விழுக்காடு வெளிநாட்டு முதலீடுகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இ.பி.எஃப். விளக்கமளித்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், வெளிநாட்டு முதலீடுகள் ரிம.823 கோடி வருவாயை ஈட்டியுள்ளன, இது மொத்த முதலீட்டு வருவாயில் 52 விழுக்காட்டைப் பிரதிபலிக்கிறது. 1,585 கோடி மொத்த முதலீட்டு வருவாயில் மொத்தம் ரிம.188 கோடி ஷரியா சேமிப்புக்காகவும், வெ.1,397 கோடியையும் வழக்கமான சேமிப்புக்காகவும் இ.பி.எஃப். சேர்த்தது.

## SPM 2021 இல் 24,941 வேட்பாளர்கள் தேர்வில் உட்காராததற்கான காரணம் கண்டறியப்படும்- கல்வி அமைச்சர்

புத்ராஜெயா:-

சிஜில் பெலஜாரன் மலேசியா (SPM) 2021 இல் பதிவுசெய்யப்பட்ட மொத்தம் 24,941 விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்கு அமரவில்லை என்பதற்கான காரணத்தைக் கண்டறிய கல்வி அமைச்சகம் (MOE) ஆய்வு நடத்தும் என்று மூத்த கல்வி அமைச்சர் டத்தோ டாக்டர் முகமது ராட்ஸி முகமது ஜிடின் தெரிவித்தார்.

மொத்தத்தில், 18,497 தனியார் எஸ்பிஎம் தேர்வர்கள் தேர்வெழுதவில்லை, மீதமுள்ளவர்கள் அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள்.

"நாங்கள் (கேபிஎம்) தரவை பகுப்பாய்வு செய்கிறோம் மற்றும் முந்தைய ஆண்டுகளின் போக்குகளை ஆராய்வோம். முன்னேற்றம் ஏற்பட்டால், எதிர்காலத்தில் மீண்டும் நிகழாமல் இருக்க ஒரு அணுகுமுறையை மேற்கொள்வோம்.

SPM 2021 கோஹார்ட் கோவிட்-19 தொற்றுநோயால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதால் அதற்கான காரணத்தை




அடையாளம் காண வேண்டும்," என்று அவர் ளுளுஆ இன் அறிவிப்புடன் இணைந்து, செகோலா மெனெங்கா கெபாங்சான் (SMK) வளாகம் 18 (1) இல் இன்று முடிவுகள் பார்வையிட்ட பின்னர் ஒரு செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.

SPM 2021 முடிவுகள் குறித்த செய்தியாளர் கூட்டத்தில் தலைமை கல்வி இயக்குநர் டத்தோ நோர் ஜமானி அப்துல் ஹமிட், பதிவு செய்யப்பட்ட 407,097 தேர்வு அமர்விற்கு வர வேண்டியவர்களில் 24,941 SPM 2021 தேர்வர்கள் தேர்வு எழுதவில்லை என்று கூறினார்.

சில மாணவர்கள் தனிப்பட்ட பிரச்சினைகள், குடும்ப பிரச்சினைகள் மற்றும் நிதி பிரச்சனைகளை எதிர்கொள்வது SPM க்கு உட்காராமல் இருக்க ஒரு மாணவனைத் தூண்டும் காரணிகளாகும் என்று ராட்ஸி கூறினார்.

கற்றலில் இடையூறு விளைவிக்கும் பிரச்சினைகள் இருப்பதாக அடையாளம் காணப்பட்ட மாணவர்கள் மற்றும் குடும்பங்களை அவரது கட்சி எப்போதும் அணுகுவதாகவும் ராட்ஸி கூறினார்.



# 2026 உலகக் கிண்ணப் போட்டியை நடத்தும் 16 நகரங்களை ஃபிஃபா (FIFA) அறிவித்துள்ளது

மாஸ்கோ:-

அமெரிக்கா, மெக்சிகோ மற்றும் கனடாவில் 2026 உலகக் கிண்ணப் போட்டியை நடத்தும் 16 நகரங்களின் பட்டியலை ஃபிஃபா(FIFA) அறிவித்துள்ளது என்று ஸ்புட்னிக் தெரிவித்துள்ளது. பட்டியலில் 11 அமெரிக்க நகரங்கள் உள்ளன: அட்லாண்டா, பாஸ்டன், டாலஸ், ஹூஸ்டன், கேன்சாஸ் நகரம், லாஸ் ஏஞ்சலஸ், மியாமி, நியூயார்க்/நியூ ஜெர்சி, பிலடெல்பியா, சான் பிரான்சிஸ்கோ மற்றும் சியாட்டில். மற்ற நகரங்கள் கனடாவில் உள்ள தொராண்டோ மற்றும் வான்கூவர், அத்துடன் குவாடலஜாரா, மெக்சிகோ சிட்டி மற்றும் மெக்சிகோவில் உள்ள மாந்தர்ரே ஆகும்.

2026 உலகக் கிண்ணப் போட்டியில் 48 தேசிய அணிகள் பங்கேற்கும் முதல் கண்டம் ஆகும்.

# சிவசங்கரி விபத்தில் சிக்கியதன் எதிரொலி காமன்வெல்த் போட்டிக்கான பதக்க இலக்கில் மாற்றம்

புத்ரா ஜெயா:-

பெர்மிங்ஹாமில் நடைபெறவிருக்கும் 2022 காமன்வெல்த் போட்டியில் தங்கப் பதக்கம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்ட எஸ்.சிவசங்கரி நேற்று நிகழ்ந்த சாலை விபத்தில் காயமுற்றதைத் தொடர்ந்து அப்போட்டியில் ஏழு தங்கப்பதக்கங்களை வெல்லும் இலக்கில் மலேசிய ஒலிம்பிக் மன்றம் மாற்றம் செய்துள்ளது.

தேசிய மகளிர் முதல் நிலை ஸ்குவாஷ் விளையாட்டாளரான சிவசங்கரி இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குப் பின்னரே மீண்டும் களத்தில் இறங்க முடியும் என்பதால் வரும் ஜூலை 28 முதல் ஆகஸ்டு 8 வரை நடைபெறும் பெர்மிங்ஹாம் காமன்வெல்த் போட்டியை அவர் தவற விட நேரும் என்று அப்போட்டிக்கான மலேசிய குழுவின் துணைத் தலைவர் ஜெரார்ட் மோன்தேய்ரோ கூறினார்.

சிவசங்கரிக்கு ஏற்பட்ட இந்த விபத்து எங்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விளையாட்டுத் துறை அமைச்சர் டத்தோஸ்ரீ அகமது பைசால் அஸுமுவுடன் நான் சிவசங்கரியைச் சென்று கண்டேன்.

அவரின் உடல் நிலை சீராக உள்ளது என்பது ஆறுதலான விஷயம். கை,கால்களை அவரால் அசைக்க முடிகிறது. மறுமொழி தரவும் அவரால் இயலுகிறது. இது நல்ல அறிகுறியாகும். பதக்க இலக்கை பொறுத்த வரை நாங்கள் அதனை மறுஆய்வு செய்வோம் என ஜெரார்ட் கூறினார். உலகின் 19வது நிலை ஸ்குவாஷ் வீராங்கனையான சிவசங்கரி (வயது 23) கடந்த ஞாயிற்றுக்கிழமை விடியற்காலை 3.46 மணியளவில் மாஜு விரைவுச்சாலையில் நிகழ்ந்த இந்த விபத்தில் தலையில் காயங்களுக்குள்ளானார். அவர் பயணம் செய்த புரோட்டோன் சாகா பி.எல்.எம். ரக க்கார் லோரியின் பின்புறம் மோதி தீப்பிடித்தது. அக்காரின் 90 விழுக்காட்டு பகுதி தீயில் சேதமடைந்தது.




## சோலோ செத்தியவாங்சாவை10-0 என வீழ்த்தியது,

# சிலாங்கூர் எஃப்சி முறியடிக்கப்படாத சாதனையாக உள்ளது



ஷா ஆலம்:

சிலாங்கூர் எஃப்சி மகளிர் அணி, ஜூன் 18 அன்று சோலோ செத்தியவங்கசாவை 10-0 என்ற கணக்கில் தோற்கடித்து, தேசிய மகளிர் லீக்கில் (LWN) தொடர்ந்து மூன்றாவது வெற்றியைப் பெற்றது.

ஜேஎஸ்ஏ அரேனா, செத்தியா ஆலம் சி மைதானத்தில் விளையாடியபோது, முதல் நிமிடத்திலேயே மக்கா ரனியாவின் கோலின் விளைவாக வெற்றி பெற தொடங்கியது, அதைத் தொடர்ந்து மூன்று நிமிடங்களுக்குப் பிறகு சித்தி நபிலா கோல் அடித்தார்.

சித்தி நபிலா 11வது மற்றும் 19வது நிமிடங்களில் மெக்கா ரனியா (14வது மற்றும் 33வது நிமிடம்) தொடர்ந்து இரண்டு கோல்களை அடித்ததன் மூலம் இருவரும் ஹாட்ரிக் சாதனையை நிறைவு செய்தனர்.

39வது நிமிடத்தில் ஃபடாதுல் நஜ்வா அடித்த ஏழாவது கோலுடன் முதல் பாதி முடியும் முன் சிலாங்கூர் எஃப்சி தொடர்ந்து சோலோ செத்தியவாங்சாவை முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் இடைவெளியை குறைக்கும் சோலோ செத்தியவாங்சாவின் முயற்சி, 72வது நிமிடத்தில் மெக்கா ரனியாவின் நான்காவது சொந்த கோலால் முறியடிக்கப்பட்டது, அதைத் தொடர்ந்து ஃபாத்தின் இமானின் சொந்த கோலும் முறியடிக்கப்பட்டது. ஆட்டம் முடிவதற்குள் சித்தி நபிலா 10வது கோலை அடித்தார். சிலாங்கூர் எஃப்சி இரண்டாவது இடத்தில் உள்ளது, மூன்று வெற்றிகளை பதிவு செய்து, கோல்களின் எண்ணிக்கையால் மட்டுமே பிரிக்கப்பட்டு மத்திய மண்டலக் குழுத் தலைவர் எஸ்எஸ்எம் பகாங்குடன் ஒன்பது புள்ளிகளைப் பகிர்ந்து கொண்டது. இரு அணிகளும் நான்காவது போட்டியில் ஜூலை 16ஆம் தேதி சந்தித்தன.

# காமன்வெல்த் போட்டியில் 107 வீரர்கள் பங்கேற்கின்றனர்




கோலாலம்பூர்:-

பர்மிங்காம் 2022 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிக்கான மலேசியக் குழுவின் எண்ணிக்கையில் மேலும் மூன்று விளையாட்டுகள் மற்றும் 12 விளையாட்டு வீரர்களின் பங்கேற்புடன் அதிகரித்தது. இந்த வளர்ச்சியானது 69 ஆண்கள் மற்றும் 38 பெண்களை உள்ளடக்கிய மொத்தம் 107 விளையாட்டு வீரர்களை உருவாக்குகிறது, அவர்கள் ஏழு தங்கம் என்ற இலக்குடன் பர்மிங்காமில் தேசிய சவாலை எதிர் கொள்வார்கள். பரிசீலனை பட்டியலில் இடம் பெற்றவர்களைத் தேர்ந்தெடுப்பது, மலேசிய ஒலிம்பிக் கவுன்சிலின் (எம்ஓஎம்) தலைவர் டான்ஸ்ரீ முகமது நோர்சா ஜகாரியா தலைமையிலான தேர்வுக் குழுவால் முடிவு செய்யப்பட்டது. ஜூன் 17 அன்று எம்ஓஎம் அறிக்கையின்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டு வீரர்கள் வியட்நாமின் ஹனோயில் 31வது சீ விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற இளம் விளையாட்டு வீரர்கள் ஆவர்.

## நாட்டின் வளம் நாட்டு மக்களின் மேம்பாட்டுக்காக செலவு செய்ய வேண்டும்.

அதில் சாலை மட்டுமல்ல, கல்வி, மருத்துவம் , வேலை வாய்ப்பு, நீர் வடிகால் என்று பல மேம்பாடுகளுக்கு வர வேண்டிய பணம் பிரதமர் முதல் அமைச்சர்கள் வரை வெளிநாடுகளில் பதுக்கி வைத்தால், நாடும் மக்களும் தொடர்ந்து சுரண்டப் பட்டால் நாம் எப்படிப்பட்ட துன்பங்களை சந்திக்க வேண்டும்? நாடு எவ்வளவு இன்னல்களை எதிர்கொள்ளும் என்பதற்கு மலேசியாவே சிறந்த உதாரணம்.







## வெளிநாடுகளில் வெ. 510 கோடி சொத்துகள் பறிமுதல் 99.57 விழுக்காடு 1எம்.டிபி. தொடர்புடையவை

புத்ரா ஜெயா:-

கடந்தாண்டில் வெளிநாடுகளிலிருந்து பறிமுதல் செய்யப்பட்டு நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட சொத்துகளின் மதிப்பு 510 கோடி வெள்ளியாகும். அவற்றில் 99.57 விழுக்காடு 1 மலேசியா டெவலெப்மெண்ட் பெர்ஹாட் (1எம்.டி.பி.) தொடர்புடைய சொத்துகளாகும்.

விசாரணைக்குப் பின் சொத்து பறிமுதல் தொடர்பான 152 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வேளையில் அவற்றில் 121 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டதாக மலேசிய ஊழல் தடுப்பு ஆணையத்தின் (எம்.ஏ.சி.சி.) தலைமை ஆணையர் டான்ஸ்ரீ அஸாம் பாக்கி கூறினார்.



அந்த வழக்குகளில் 96.7 விழுக்காடு அல்லது 117 புரோசிகியூஷன் தரப்புக்கு சாதகமாக இருந்த வேளையில் நான்கு வழக்குகள் அல்லது 2.2 விழுக்காடு புரோசிகியூஷன் தரப்புக்கு பாதகமாக அமைந்தன என்று அவர் சொன்னார்.

இங்குள்ள எம்.ஏ.சி.சி. தலைமையகத்தில் நடைபெற்ற 2021 ஆம் அண்டு தகவல் சாதன விருதளிப்பு நிகழ்வில் உரையாற்றிய போது அவர் இவ்விபரங்களை வெளியிட்டார்.

சிறிய தொகை சம்பந்தப்பட்டிருந்தாலும் கூட ஊழல் தொடர்பில் செய்யப்படும் அனைத்துப் புகார்களையும் எம்.ஏ.சி.சி. விசாரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

எம்.ஏ.சி.சி.யின் அதிகார வரம்பிற்குட்பட்ட குற்றத்தன்மை இருப்பதற்கான காரணம் தென்படும் பட்சத்தில் விசாரணை அறிக்கை திறக்கப்படும். விசாரணை முற்றுப் பெற்றவுடன் மேல் நடவடிக்கைக்காக அந்த அறிக்கை சட்டத் துறைத் தலைவர் அலுவலகத்திற்கு அனுப்பப்படும் என்றார் அவர். ஒருவர் மீது குற்றஞ்சாட்டுவதற்கு ஒப்புதல் அளிப்பது சட்டத் துறைத் தலைவர் அலுவலகத்தின் விவேகத்திற்குற்பட்டதாக இருந்தாலும் எம்.ஏ.சி.சி.யின் விசாரணையின் மூலம் கிடைக்கும் ஆதாரங்கள் அத்துறையின் முடிவுக்கு வலுசேர்க்கும் வகையில் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.




## தீபகற்ப மலேசியாவில் கூட்டரசு சாலைகளைப் பழுதுபார்க்க வெ.340 கோடி தேவை

கிரீக், ஜூன் :-

தீபகற்ப மலேசியா முழுவதும் உள்ள பழுதடைந்த கூட்டரசு சாலைகளைப் சீரமைக்க பொதுப்பணி அமைச்சுக்கு 340 கோடி வெள்ளி தேவைப்படுகிறது.

பழுதடைந்த சாலைகளைச் செப்பனிடுவது மற்றும் புதிதாக சாலைகளை அமைக்கும் பணிகள் வரும் 2023 ஆம் ஆண்டில் முழுமை பெறும் என எதிர்பார்க்கப்படுவதாக அதன் அமைச்சர் டத்தோஸ்ரீ ஃபட்சிலா யூசுப் கூறினார்.



இந்த நிதி ஒதுக்கீட்டை வழங்குவதற்கு முன் பல்வேறு அம்சங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம். கிழக்கு-மேற்கு கூட்டரசு சாலையை சீரமைக்கத் தேவைப்படும் 6.8 கோடி வெள்ளிக்கு பற்றாக்குறை நிலவுவதும் இதில் அடங்கும் என அவர் தெரிவித்தார்.

இவ்விவகாரத்தில் நாங்கள் நிதியமைச்சை குறைகூற விரும்பவில்லை. எனினும், இதுதான் நாங்கள் எதிர்நோக்கும் சவாலாகும். இப்பிரச்னைக்கு குறுகிய கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் தீர்வு காண்பதற்கான வழிகளை நாங்கள் ஆராய்வோம் என்றார் அவர்.

பேராக் மாநிலத்தில் மட்டுமின்றி நாடு முழுவதும் உள்ள பழுதுபார்க்க வேண்டிய சாலைகளை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். அதிக வாகன எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாக தற்போதுள்ள சாலைகள் ஐந்து முதல் ஏழு ஆண்டுகள் மட்டுமே தாக்குப் பிடிக்கும். கிரீக் போன்ற இடங்களில் 40 ஆண்டுகளுக்கு முன்னதாக அமைக்கப்பட்ட சாலைகளின் நிலையை சற்று எண்ணிப்பாருங்கள் என்று அவர் சொன்னார்.

சுமார் 130 கிலோ மீட்டர் நீளம் கொண்ட கிழக்கு-மேற்கு நெடுஞ்சாலையின் மேம்பாடு தொடர்பில் நடைபெற்ற விளக்கமளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

Diterbitkan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1, Jalan Indah 14/8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor.
Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off persiaran Selangor Seksyen 15, 40200 Shah Alam, Selangor.